திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

ஏடு : 8 15—7—55 வெள்ளி : 14 பக்கங்கள் : விலை 3 அணு மலர் : 50

கற்பனை

ஆச்சாரியார் தீட்டிய மடல்!

அன்புள்ள சகோதர சகோதரிகளே, நமஸ்காரம். நாம் ஒன்று நினைத்தால் ஆண்டவன் ஒன்று நினைக்கிறார். எல்லாம் காலத்தின் கோலம்! ஆஸ்திகர்களாகிய நம்மைப் போன்றவர்களுக்கு ஆண்டவன் கையை விரிக்கிறார். நாஸ்திகர்களுக்கோ நடுநடுங்கி அவர்கள் தொட்டதையெல்லாம் வெற்றியாக்குகிறார். என்றாலும் எனக்கு ஒரு நம்பிக்கையுண்டு. இந்த நாஸ்திகர்களுக்கு இவ்வுலகில்தான் ஏதோ சில வெற்றியும் வாழ்வும் இருக்க முடியுமே தவிர மோட்ச சாம்ராஜ்யத்தில் அவர்களுக்கு அதோ கதிதான்! ஆதலால்தான் ஆண்டவன் அநித்தியமாகிய இந்த பூலோக வாழ்வில் நாத்திகர்களை எதிர்க்காமல் தொலைந்து போகட்டும் என்று அவர்களுக்கு வேண்டியதைச் செய்து வருகிறார். ஆனால் மோட்சலோகத்திலோ ஆண்டவன் இந்த அற்ப நாஸ்திகர்களுக்கு அஞ்ச வேண்டியதில்லை. ஏனெனில் அவரது பாதுகாப்புப் படையினர் (இராணுவம்) அவ்விடம் ஏராளமா யிருக்கின்றனரல்லவா!

பாருங்களேன் நான் உங்களுக்கு எழுத வந்ததை மறந்து எதையெதையோ கூறி விட்டேன். இப்படித்தான் வர வர என் விஷயமெல்லாம் விபரீதத்திலேயே முடிகிறது.

நான் ஆட்சிபீடமேறிய சமயங்களிலெல்லாம் காலத்தைஅனுசரித்து நல்லமுறையிலே சர்க்காரின் இயந்திரத்தை நடத்திச் செல்ல வேண்டுமென்றுதான் திடமாக முடிவு செய்வது வழக்கம். அது என்னக் கோளாறோ அல்லது என்னுடைய பூர்வீக ஜென்மத்தின் கர்ம பலனோ தெரியவில்லை. ஆட்சிபீடமேறிய பிறகு எனது புத்தியே தலைகீழாக (Upset) மாறிவிடுகிறது. அட ராம ராமா! என்ன இந்த மனிதர் ராமனை வேறு வம்பில் இழுத்து விடுகிறாரே என்று எண்ணுகிறீர்களா? நான் ராமனை நோவாமல் வேறு யாரிடம்தான் முறையிடுவது! பார்த்தீர்களா நான் உங்களுக்கு எழுத வேண்டியதை ஆரம்பிக்காமல் ஏதேதோ கூறுகிறேன், என்ன செய்வது இதைத்தான் "கர்ம காண்டம்" என்று கூறுவார்கள்! சரி அது எப்படியோ தொலையட்டும், இப்போது விஷயத்திற்கு வருகிறேன். கூர்ந்து படியுங்கள்!

நான் எனது அரசியல் வாழ்விலே எவ்வளவோ பிரமாதமான காரியங்களையெல்லாம் சாதித்திருக்கிறேன். எதிர்ப்புகளையெல்லாம்சமாளித்திருக்கிறேன்.எல்லாவற்றிலும் சக்ரவர்த்தித் திருமகனாரின் கிருபையினாலே எனக்கு வெற்றிதான் ஏற்பட்டிருக்கிறதே யல்லாது தோல்வி கண்டதில்லை, இன்னும் வெளிப்படையாகவே கூறுகிறேனே! மற்றவர்களெல்லாம் ஓடி அலைந்து படாதபாடு பட்டு, அறிவைச் செலவிட்டு முடிக்க நினைக்கும் காரியத்தை நான் உட்கார்ந்த இடத்திலேயே யிருந்து கொண்டு அவர்களின் எண்ணத்தை முயற்சியை தூள் தூளாக்கிவிட்டு அதை நான் பயன்படுத்திக் கொண்டிருக்கி



றேன். இதுபோல ஏராளமான சம்பவங்களுண்டு எனது பொதுவாழ்வில்! உதாரணத்திற்கு ஓரிரண்டு கூறுகிறேன் கேளுங்கள்.

காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் வகுப்பு வாதம் பேசிய எனது நண்பர் ஈ. வே. ராமசாமி அவர்களை எனக்கும் அவருக்கும் நண்பரான திரு. வி. க. அவர்களை விட்டே எதிர்க்கச் செய்தேன். திரு. வி. க. அவர்களின் பார்ப்பன பக்தியாலேயே ஈ. வே. ரா. காங்கிரசை விட்டு வெளியேறினார் என்றபழி அவர்கள் மீது சுமத்தப் பட்டது, ஆனால் நான் என் எண்ணத்தை சர்வசாதாரணமாக நிறைவேற்றிக் கொண்டேன்

அதுபோலவே 1937-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காலஞ்சென்ற சத்திய மூர்த்தி, நாடெல்லாம் சுற்றி தேர்தல் பிரச்சாரம் செய்தார், ஜஸ்டிஸ் கட்சியை படுதோல்வி யடையச் செய்ய படாத பாடெல்லாம் பட்டார். காங்கிரஸ் மந்திரி சபையில் சென்னை மாகாணத்துக்கு தானே முதன் மந்திரியாக வேண்டு மென்பதும் பட்டதாரிகள் தொகுதியிலிருந்து சட்ட சபைக்கு உறுப்பினராக வருவதென்றும் திட்டமிட்டிருந்தார். நானோ தேர்தல் பிரசாரத்தில் தலையே கட்ட வில்லை, ஆனால் கடைசியில் என்ன ஆயிற்று தெரியுமா? அந்த பட்டதாரிகள் தொகுதிக்கு அபேட்சகராய் நிற்க எனக்கு மேலிடத்திலிருந்து 'பிரைஸ்' கிடைக்கும்படி செய்தேன். நோகாமல் நொடியாமல் சட்டசபை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டேன். சத்தியமூர்த்திக்கோ பெரும் ஏமாற்றம் சென்னை முதன் மந்திரியாக வரயிருந்தவர், அதற்காக நாடெங்கும் சுற்றி தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு வெற்றித் தேடித்தந்து சட்டசபைக்கு அசைக்க முடியாத பலத்தை தேடி வைத்திருந்த சத்தியமூர்த்தியின் முயற்சியை நான் ஊர் சுற்றாமலேயே இன்னும் சொல்லப் போனால் அரசியல் துறவறம் பூண்டிருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டே முதன் மந்திரி பதவியில் போய் அமர்ந்தேன். இன்னும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் பல உண்டு.

இவ்வளவு ஏன்—என்னைத் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவராயிருந்த காமராசரும் அவரது கோஷ்டியும் தலையெடுக்க வொட்டாமல் ஏதேதோ செய்தனர், காங்கிரஸ் உறுப்பினராகக் கூட சேரத் தகுதியில்லையென்று அறிவித்தனர். வேறு யாராயிருப்பினும் இச்சம்பவத்தைக் கண்டு நடுங்கி போயிருப்பார்கள். நான் என்ன செய்தேன்

8-ம் பக்கம்

தரணியாண்ட திராவிடனே உனக்கா இந்த 'இழிநிலை'?

இன்று பெரும்பாலான மக்கள் நம் நாட்டைவிட்டு பிழைப்புக்காக—மனைவி, மக்களை விட்டுப் பிரிந்து கண்ணீரை கையிலேந்திக் கொண்டு—கள்ளத்தனமாக, தோணியேறி இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு செல்கின்றனர், சென்ற இடத்திலாவது அவர்களின் வாழ்வு நல்லதாக இருக்கிறதா! அதுதானில்லை. நாயினும் கேடாக அலைந்து சாகின்றனர்.

பழமுதிர்ச் சோலையாக இருந்த நம் திராவிடம் இடையே வந்த பார்ப்பனக் கூட்டத்தால் பாலைவனமாக மாறிவிட்டது. அறிவும், அன்பு உள்ளமும் கொண்ட திராவிட பெருங்குடி மக்கள், ஆரியர் எழுதி வைத்த வேதசாஸ்திரத்தால் அழிந்து, அறியாமைக்குள்ளானார்கள் பலபேர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திராவிடக் கொள்கை ஆரிய மனுதர்மத்தால் மறைந்து விட்டது பின் எண்ண முடியாத கடவுள்களும், நம்ப முடியாத வேதசாஸ்திரங்களும் ஆரியரால் கொண்டுவரப்பட்டதனால் இந்நாடு பழமையால் அடிமைப்பட்டு வறுமைக் காடாகி விட்டது.

இந்நிலையை மாற்றியமைக்க அழிந்துபோன பழமுதிர்ச் சோலையை மீண்டும் உருவாக்க முப்பதாண்டுகளுக்குமேலாக பகுத்தறிவு இயக்கத்தினர் பணிபுரிந்து வருகின்றனர். நமது பணி பலன்தரக் கூடிய அளவில் வளர்ந்து விட்டது—பக்தர்கள் பதை பதைக்கின்றனர். பழமை அழிந்து, பகுத்தறிவு பரவுகிறது. நாம் நடைதளராமல் செல்கிறோம் வெற்றி நிச்சயம். நாம் இம்மாதிரி பணிகளில் ஈடுபட்டாலும் தாழ்ந்து கிடக்கும் மக்களை மறந்து விடவில்லை. பரிதவித்து நிற்கும் மக்களைக் கண்டு காங்கிரஸ் கட்சியாளர் உள்பட மற்ற அரசியல் கட்சியாரும் பரிதாபப்படுவதுபோல தேனொழுக பேசுவார்களேதவிர பாதை காட்ட மாட்டார்கள். அவர்களால் அது முடியாத காரியம். அம்மாதிரி பணிகளில் ஈடுபட்டு பணிபுரிவது திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்று தைரியமாகக் கூறமுடியும்.

தென்னாட்டிருந்து அனேகம் பேர் பிழைப்புக்காக பம்பாய் வருகிறார்கள். பம்பாயில் நமது மக்கள் வாழும் வாழ்க்கையை நேரில் காணும் என்போன்ற இளைஞர்களின் உள்ளம் வேதனையால் குமுறுகிறது. நாங்கள் இருப்பது பம்பாய்—ஆயிரம் மைல்களுக்கப்பால் அவதிப்படும் நிலை. தங்க இடமின்றி, சாக்கடையோரங்களில்—சாக்குகளால் கட்டப்பட்ட எட்டடி குடிசைக்குள், கணவன், மனைவி, இரண்டு—அல்லதுமூன்று குழந்தைகள் ஆக ஐந்தாறுபேர் அந்த சிறு குடிசைக்குள் வாழும் நிலைதான் நம் மக்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. பன்றி நாய்களைவிட மிக கேவலமான வாழ்க்கை.

இப்பொழுது பம்பாயில் மழை காலம் ஆரம்பித்துவிட்டது, எங்கும் தண்ணீர் மயம். இந்த நிலை மூன்று மாத காலத்திற்கு நீடித்து இருக்கும். தோழர்களே! எண்ணிப்பாருங்கள் குடிசை மக்களின் கதியென்ன என்பதை.

மழைத் தண்ணீரெல்லாம் அந்தக் குடிசைக்குள்தான் தேங்கிக் கிடக்கும். படுக்க முடியாது—இருக்கவும் முடியாது. இரவு நேரங்களிலே படுப்பதற்காக பக்கத்திலுள்ள மாஹீம் ஸ்டேஷனுக்குச் சென்று அங்கே இரவு பொழுதைக் கழிப்பார்கள். இதிலே போலீஸ்காரர்களின் தொல்லை ஒருபக்கம், கயவர்களின் காமவிளையாட்டு மற்றொருபுறம், இதற்கு மத்தியில் மானத்தை மறைப்பதற்கு முழுத்துணியின்றி நமது தாய்மார்கள் படும் அவதி ஒருபுறம். அய்யகோ! இதையெல்லாம் எழுத எனக்கு வெட்கமும் வேதனையும் ஏற்படுகிறது,

பம்பாய்த் தோழர் எடுத்துக் காட்டும் பரிதாப சம்பவம்!

தென்னாட்டிலிருந்து பிழைப்புக்காக இங்கு வந்தவர்களில் வசதியோடு வாழ்பவர்கள் வாழ்க்கை செய்கிறார்கள், அப்படி வாழ்பவர்களின் பகுதியே ஒரு தனி அலாதி தென்றல் வீசும் அங்கே, மினுமினுப்பான மனித உருவங்கள், மணகுடிசைகள் காண முடியாது அங்கே எல்லாம் மாளிகைகள், கரடுமுரடான பாதை இருக்காது. வழவழப்பான சிமெண்ட் ரோடுதான் அங்கே உண்டு. அதுதான் மாதுங்கா, பெரும்பாலும் அப்பகுதியில் பார்ப்பனர்கள்தான் அதிகம் சென்னைக்கு ஒரு மயிலாப்பூர், மாம்பலம்—பம்பாயிக்கு ஒரு மாதுங்கா. அவர்களுக்கு எங்கும் வசதியான வாழ்க்கை. திராவிடப் பெருங்குடி மக்கள் வாழும் இடம்தான் தாராவி. தாராவி என்றாலே குப்பை மேடு என்று பொருள் என சிலர் கூறுகிறார்கள். இங்கே பெரும்பாலும் ஆலைகளிலும், கம்பெனிகளிலும் கூலிகளாக வேலை செய்யும் தொழிலாளர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் தமிழுணர்வு கொண்ட சிங்க ஏறுகள் பலர் உண்டு என்பதை பெருமையாக கூற முடியும். மேட்டுக் குடியினர் வாழும் அந்தப் பகுதியில்—அவர்களால் நிறுவப்பட்ட தமிழ்ச் சங்கம் ஒன்று உண்டு என்றாலும் கூட பம்பாயை பொறுத்தவில் தமிழ்ப் பண்பாட்டை வடநாட்டார் தெரிந்து கொள்ளும் அளவுக்கு பிரச்சாரம் செய்யும் தோழர்கள் பெருவாரியாக தாராவியில்தான் இருக்கிறார்களே தவிர அவாள் பகுதியில் எண்ணிக்கைக்கு ஒன்று இரண்டு காண முடியாது என்று கூட சொல்லலாம்

தாராவி ஒரு பெரிய அரசியல் மார்க்கெட். இந்தியாவில்—குறிப்பாக தென்னாட்டில் எத்தனை கட்சிகள். இயக்கங்கள் இருக்கின்றதோ அவைகளைத்திந்கும் ஒவ்வொரு கிளைகள் தாராவியில் உண்டு, அறிஞர் அண்ணா, பெரியார் ஈ. வே ரா. ராஜாஜி, ஜின்னா, அம்பேத்கார், காமராஜர், ம. பொ. சி. நாவலர் நெடுஞ்செழியன், டாக்டர் மு. வரதராசனார். கி. ஆ. பெ. விசுவநாதம், கலைஞர் மு. கருணாநிதி, என். வி. நடராசன், அரங்கண்ணல் சி. பி. சிற்றரசு, கவிஞர். கண்ணதாசன் ஆசைத்தம்பி, என். எஸ். இளங்கோ, சத்தியவாணிமுத்து, எம். எஸ். இராமசாமி. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன். பா. ஜீவானந்தம், குருசாமி, பி. ராமமூர்த்தி போன்ற அரசியல் கட்சித்தலைவர்களெல்லாரும்தாராவியில்வந்துபேசியிருக்கிறார்கள் என்றால் தாராவியின் அரசியல் நிலை எந்த அளவுக்கு இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். இப்படி நமது இன முழக்கத்தைக் குறைக்காமல் நமது கொள்கை காட்டுத் தீ போல் பரவி வரும்போது கூட நமது மக்களிடையேயுள்ள பற்றுக் குறை நீங்கிய பாடில்லை அவதிப் படும் நிலை அதிகமாவே யிருக்கிறது, கடந்த ஒரு சில தினங்களுக்கு முன் நடந்த ஒரு சோக நிகழ்ச்சியை குறிப்பிடவே இதனை எழுதுகிறேன். தாராவியிலிருந்துவெளி இடங்களுக்கு வேலைக்குப் போகும் தோழர்கள் பெரும்பாலும் மின்சார வண்டியில்தான் செல்ல வேண்டும். கொஞ்சம் வசதி உள்ளவர்கள் பஸ்ஸில் அல்லது டாக்ஸியில் செல்வார்கள், மின்சார வண்டியில் செல்பவர்கள் பாதிக்கு மேல் மாஹிம் ஸ்டேஷனுக்குத்தான் வர வேண்டும், தாராவியிலிருந்து மாஹிம் ஸ்டேஷன் ஏறக்குறைய இரண்டு பர்லாங்கு தூரம்தான் இருக்கும். ஸ்டேஷனிலிருந்துதாராவிக்கு வருவதற்கு ஒரு ரோடு ஒன்று உண்டு. அதன் இரு புறங்களிலும் சாக்கடை குளங்கள் அதனருகில் ஏழெட்டு சாக்கு குடிசைகள். அந்த குடிசைவாசிகள் பெரும்பாலும் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், கூலி வேலை செய்து வாழ்க்கையை நடத்துபவர்கள், இந்த மக்கள் கூட்டத்தில் ஒருவர்தான் கருப்பண்ணன் (நாய்க்கர்) இவர் சேலம் மாவட்டத்திலுள்ள புளியம்பட்டி என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். இவருடைய மனைவியின் பெயர் தங்கையத்தம்மாள். மூன்று குழந்தைகள் உண்டு என சொல்கிறார்கள், தோழர் கருப்பண்ணன் அவர்களுக்கு வயது 29 ஆகிறது.

20—6—55 மாலை சுமார் 5–30 மணியளவில் தாராவிக்கு வரும் அந்த ரோட்டு ஓரத்தில் செத்துக் கிடந்தார். பம்பாய்க்கு வந்து ஆறுமாத காலமாக வேலையின்றி வேதனைப்பட்டாராம். கையிலிருந்தகொஞ்சம்பணமும் காலியாகியவுடன் சாப்பாட்டுக்கு பெரிய திண்டாட்டமாகி பிச்சை யெடுத்தாராம் சில நாள். எத்தனை நாளைக்கு அந்த வாழ்வு! கடைசியில் உணவின்றி உயிர் துறந்து கிடந்தார், போவோர் வருவோரிடம் பிச்சை கேட்டார் ஒருவர். அந்தப் பிணத்தை அடக்கம் செய்வதற்கு பணமில்லாமல் பிச்சை கேட்டு 15—4—0 சேர்த்தார்.

நான் வேலை முடிந்து அவ்வழியே வந்துகொண்டிருந்தபோது இந்த பரிதாப நிகழ்ச்சியை கண்டு பதைபதைத்துப் போனேன். அந்தப் பிணத்தை தூக்குவதற்கு அந்தக் குடிசைவாசிகளை தவிர வேறுயாரும் கிடையாது என து மனம் வேதனையால் துடித்தது. நானும் அதில் கலந்து கொண்டேன் தாராவியில் மிகப் பெரிய சமுதாய சேவை செய்யும் நண்பர்களும் அரசியல் பேசும் அன்பர்களும் அவ்வழியே வந்து போனார்கள். 'வாருங்கள் இந்த அனாதைப் பிணத்தைச் தூக்கிச்செல்வோம்' என்று பலரிடம் கேட்டேன், பரிதாபப் பட்டார்களே தவிர பிணத்தினருகில் யாரும் வரவில்லை. பெருமையாகவே எழுதுகிறேன் பதினையாயிரம் தமிழ் மக்கள் வாழும் தாராவியில் அந்த பிணத்தைத் தூக்குவதற்கு என்னைத் தவிர வேறு யாரும் முன்வரவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள என்போன்ற இளைஞர்களை தூற்றித் திரியும் நண்பர்கள் ஏன் அந்தப் பிணத்தை தூக்க முன்வரக் கூடாது. யாராக இருந்தால் என்ன! தென்னாட்டில் பிறந்தவன்—திராவிட இனத்தைச் சேர்ந்தவன் ஏன் வரக் கூடாது! ஜாதியை ஒழிப்பவர்கள் நாங்கள் என்று கூறுபவர்கள் அந்த நேரத்தில் எங்கோ ஒளிந்து கொண்டார்கள் போலும்

இரவு 7-30 மணிக்கு நான் உட்பட ஏழு தோழர்கள் சேர்ந்து பிணத்தைத் தூக்கிச் சென்றோம். பிணம் புதைக்கும் அந்த தோட்டம் நாலு மைல் தூரத்தில் இருக்கிறது. அந்த சென்றோம் அந்த இரவில். போகும்போது பெரும் மழை காற்று ஒருபுறம், எங்கள் ஆடைகளெல்லாம் நனைந்து உடல் நடுக்கத்தோடு சென்று இரவு 10-10 மணிக்கு தோழர் கருப்பண்ணன் அவர்களை அடக்கம் செய்தோம் அன்று இரவு முழுவதும் என் உள்ளம் வேதனையால் குமுறியது.

பெரியோர்களே! தோழர்களே! தாய்மார்களே! என்போன்ற இளைஞர்களே! பாருங்கள் நமது மக்களின் வாழ்க்கை நிலையை. வடநாட்டிலுள்ள மார்வாடிகளும், குஜராத்திகளும் நமது திராவிடத்தை சுரண்டிக் கொள்ளையடிக்கிறார்கள் வியாபாரத்தின் மூலம். ஆனால் நம்மினத்தவரோ வடநாட்டில் வந்து வேலையின்றி வேதனையால் மனம் உடைந்து மாளும் நிலை, வயிற்றுப் பசியைப் போக்க முடியாமல் பிணமாகிக் கிடக்கும் பரிதாப நிலை. இந்நிலை மாறி—திராவிடம் விடுதலை நாடாகி—நமது கரங்களிலேயுள்ள அடிமைச் சங்கிலி அறுபட்டு நல்வாழ்வு வாழும் நாள் எந்நாளோ!

இரா. மா. சண்முகராசன்

தி. மு. கழகம், பம்பாய்

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1

பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி; கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்,

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை

" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்

" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்

" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

காரைக்குடி

கரைக்குடி தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 3—7—55 ஞாயிறு மாலை 4 மணிக்கு செயலாளர் பால்ராஜு தலைமையில் நடைபெற்றது; கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

திரு. சு. ப. முத்துராமன், இராஜேந்திரன், அவர்களை செயற்குழு உறுப்பினராக சேர்த்துக்கொள்வது.

மாநில மாநாட்டு நிதியை திரட்டி இம்மாதம் 10-ந் தேதிக்குள் அனுப்புவது.

பொதுச்செயலாளர் அறிக்கைப்படி உண்மை செய்திகளை மறைத்துக் கூறிவரும் தினத்தந்தியை கழக உறுப்பினர்களோ கழகத்திற்கோ வாங்கவோ படிக்கவோ கூடாது.

சுவைத்துப் பாரீர்

டபிள்யூ. பி. டி. எழிலன்

நாற் கொம்பாடு !

உத்தரப் பிரதேசம் வடஇந்தியாவில் உள்ளது· அது ஆங்கிலேயர் ஆட்சியின் போது 'யுனைடெட் பிராவின்ஸ்' அதாவது ஐக்கிய மாகாணம் என்றழைக்கப்பட்டது.

அப்பிரதேசத்து வடகோடியில் அல்மோராவிலிருந்து கார்வால் வட்ட எல்லை அடங்கலாக உள்ளவிடத்து கிதாரிநாத் (22,790 அடி), நந்தாதேவி (25661 அடி), திகாமின் (25,373 அடி) என்பன போன்ற உறைபனி மலைக் குவியல்கள் இருக்கின்றன.

அத்தகு மலைக் குவியல்களைத்தான் ஆங்கிலத்தில் 'மாஸிஃப்' (Massif) என்றழைப்பது.

அம்மலைக் குவியல்களுக்கு மத்தியில் திரிசூல மலைக்கூட்டம் உள்ளது. அவண் நடுவே ரூப்குண்ட் என்ற ஏரி இருக்கிறது:

அந்த ஏரிக் கரையிலேதான் நூற்றுக் கணக்கான பிணங்கள் பனியுடன் உறைந்து கிடக்கின்றனவாம.

பனிப் புயலாலும் (Snow—Storm) பனிச்சரிவாலும் (Avalanche), பலப்பல ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தாக்குண்டு சிக்குண்டு புதையுண்டு மாண்டு கிடக்கிருர்களாம்.

அவர்கள் அங்ஙனம் மாண்டது இன்று நேற்று நடந்த நிகழ்ச்சியல்லவாம். பலபல நூற்ருண்டுகட்கு முன்பே இறந்து பிணமாகக் கிடப்பவர்களாம் அவர்கள்.

சரியாக எக்காலத்தில், எவ்வெச் சூழ்நிலைகளில், எவ்வெவ்வகைகளில் அவர்கள் உறைபனியால் மூடுண்டு கிடக்கிருர்கள் என்பதனை விஞ்ஞான ஆராய்ச்சி வல்லுநர்கள்தான் அறுதியிட்டுக் கூறமுடியுமாம்.

புதையுண்டவர்களின் உடல் அழுகிவிடாமலும், வேறுவகைகளில் கெட்டுவிடாமலும் சுருண்ட ரப்பர்போல் பனிப் பாறைகளின் அடியில் அமுங்கிக்கிடக்கின்றனவாம்.

பனிப்பாறையில் அமுக்குண்டு மக்கள் மாண்டு கிடக்கும் பகுதி பூ மட்டத்திற்கு 18,000 அடி உயரத்திலிருக்கிறதாம்.

செப்டம்பர், 1942-ல் ஏதோ மலை மூலிகை தேடுவான் வேண்டி ஆங்கே போந்த காட்டிலாகா அதிகாரி எச்.கே. மாதவால் என்பார் காலில் கூட புதையுண்டு ரப்பர்போல் சுருண்டுகிடக்கும் உடலொன்று தட்டுப்பட்டதாகவுங் கூறுகிருராம்.

இத்தகு வதந்திகளைக் கேள்வியுற்ற உத்தரப்பிரதேசத்து காட்டிலாகா மந்திரி ஜகமோகனசிங் நெகி என்பார் உண்மை காண ரூப்குண்ட் ஏரிப்பகுதிக்குச் சென்று பார்வை யிட்டாராம்.

ரூப்கண்டைச் சுற்றி மூன்று மைல் வட்டாரத்தைத்தான் அவரால் காண முடிந்ததாம். அதற்கு மேல் முடியாததற்குக் காரணம் பிரம்மாண்டமான பனிப்பாறைகள் தடுத்து விடுகின்றனவாம்.

அவர் பார்த்த அளவில் மக்கள் அங்கு மாண்டு கிடக்கிருர்கள் என்பது உண்மைதான்; மாண்டவர் ரப்பர் உருண்டைபோல் சுருண்டு கிடக்கிருர்கள் என்பதும் உண்மைதான் என்று அறிவித்தார்.

அதோடு ரூப்கண்டிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள பாட்டர் நிகோனி (இப்பெயர் நடன ராணிகளின் தொடர்பு கொண்டதாம்) என்ற இடத்திலும் சிதறிய முண்டங்களும், மண்டை ஓடுகளும், வெட்டுண்ட கை, கால்களும் கிடப்பதாகக் கூறப்படுகிறதாம். ஆனல் அதை. பனியின் கொடுமையால், காண முடிவதில்லையாம். இப்பகுதி பூ மட்டத்திற்கு 15,000 அடி உயரத்தில் உள்ளதாம்.

இதைக்குறித்து வதந்திகள் பலபலவாருக உருப்பெற்றிருக்கின்றனவாம்.

திபேத்திலிருந்து அவ்வழிச் சென்றுகொண்டிருந்த வணிகர் கூட்டம், அதுபோழ்து திடுதிப்பென்று கிளம்பிய பனிப் புயலாலும், பனிச் சரிவாலும் அமுக்குண்டு மாண்டார்கள் என்பது ஒரு சாராரின் கூற்று.

ஒரு பனிமலை உச்சியை முற்றுகையிட ஒரு சீக்கிய தளபதியின் கீழ் புறப்பட்டக் குழு, தமது முற்றுகையை முடித்து திரும்பி திபேத் செல்லும்போது நிகழ்ந்த பனிச்சரிவின் கொடுமையால் புதையுண்டு மாண்டார்கள் என்போர் மற்றெரு சாரார். ஆனல் மாண்டவர்களில் பெண்களும் குழந்தைகளும் இருப்பதால் அக்கூற்று மறுக்கப்படுகிறது.

இவைபோக பிறிதொரு விசித்திரக் கூற்று என்னவெனின்: பல நூற்ருண்டுகளுக்கு முன்பு ஒரு ராஜா வாழ்ந்தாராம். அவர் நந்தாதேவி என்னும் சாமிக்கு ஆடு பலி கொடுப்பதாக விரதம் பூண்டாராம்.

அவ்வாடு நான்கு கொம்புகள் உளதாயிருத்தல் வேண்டுமென்று விழைந்தார். அப்படிப்பட்ட ஆடு ரூப்கண்ட் பகுதி சுற்று வட்டாரத்தில் கிடைக்கும் என்று யாரோ கூறினுர்களாம்.

உடனே ராஜா தமது படைவரிசைகளோடு நாற்கொம்பாட்டைத் தேடிப் பிடிக்கப் புறப்பட்டாராம்.

நானு பக்கங்களிலும் தேடி அலைந்தார்களாம். கிடைக்கவில்லையாம் ராஜா விழைந்த விசித்திர ஆடு! எப்படியும் ஆட்டைப் பிடித்தே நாட்டை ஏகுவேன் என்று விடாது அலைந்தார்களாம், தேடினுர்களாம்.

அப்படி ஆட்டைத் தேடி அலைந்து கொண்டிருந்தவர்கள் மீதுதான் பனிப்புயலும் பனிச்சரிவும் கப்பிக்கொண்டது.

கூண்டோடு அனைவரும் பனியில் புதையுண்டு மாண்டுபோனுர்களாம்! இப்படி ஒரு கூற்றும் நிலவுகிறது!

நந்தாதேவியை நம்பினேர்களின் கதி இப்படியா ஆவது? நந்தாதேவியின் பலிபீடம் நான்கு கொம்புகளோடு கூடிய ஆட்டின் இரத்தத்தால் நனைக்கப்படாமலா போனது?

ஒருவேளை நந்தாதேவியே பலியை வெறுத்தாள் போலும்! கூடாத பலியை கூட்டப்பார்க்கிருன் ராஜாவென்று கடிந்து ராஜாவையும் அவர்தம் சகாக்களையும் தம் சக்திகொண்டே கொன்று குவித்து பனியால் மூடினுளோ? ஏழையேன் ஏதுமறிகிலேன்! ஆஸ்திகக் குஞ்சுகளுக்கே வெளிச்சம் என விட்டு விடுகிறேன்!

நாற்கொம்பு ஆடே இவர்கள் கையில் சிக்காமற் போனுயே! உனது சமத்தே சமத்து!

எட்ணு எரிகிறது !

மலை எரிகிறது! பூமிக்கு அடியிலிருந்து நெருப்புக் குழம்பு குபீர் குபீர் என்று பொங்கி வழிந்தோடுகிறது! பூமி யென்னும் இயற்கை துருத்தி யின்று ஊதித் தள்ளப்படும் சுவாலை வான்முட்ட ஓங்கி எழுகிறது!

இது அதிசயத்திலும் அதிசயம்! ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! ஆனல் அத்தனைக்கும் அழிவு! அழிவு!! அழிவு!!!

இதைக் கண்டு இயற்கையின் அற்புதம் என்று வியப்பதா? கோளாறு என்று கடிவதா? அல்லது அழிவுக்கோலம் என்று நிந்திப்பதா?

எரிமலை என்று தமிழில் கூறுகிறேம். ஆங்கிலத்தில் அது "வால்கனே" என்றழைக்கப்படுகிறது. ஆனல் அச்சொல்லின் பிறப்பு இத்தாலி மொழியினின்று எனக் காணக் கிடக்கின்றது.

ஐரோப்பா கண்ட முழுமைக்கும் வேறெங்கும் காணப் பெருத அத்துணை கொடுஞ் சக்தி வாய்ந்த எட்ணு என்னும் எரிமலை, இத்தாலி நாட்டில்தானே இருக்கிறது,

உயரத்தில் எவரெஸ்டு 'உலகத்தின் கூரை' என உலகப் புகழ் கொண்டால், 'எட்னு' எரிக்குழம்பை வாரி யிறைப்பதில் உலகப் புகழ் எய்துகிறது. சில ஆசிரியர்கள் அதை மத்தியதரைக் கடலின் இயற்கைக் கலங்கரை விளக்கு' என வருணித்துள்ளார்கள்.

ஆதிகாலத்து உரோமர்கள் (இத்தாலியர்கள்) தெய்வமாகக் கொண்டாடியவற்றுள் நெருப்பும் ஒன்று. அந்நெருப்புக் கடவுளை அந்நாட்டு இலத்தீன் மொழியில் வால்கனஸ் (Volcanus) என்றழைக்கப்பட்டது,அதைக் கொண்டே எரிமலைக்கு வால்கனே (Volcano) என்று ஆங்கிலத்தில் பெயர் வந்தது என்க.

எட்ணு எரிமலை ஜூலை 3-ந் தேதியன்று குமுறியது. இடி இடியென இடியோசை எழுப்பியது. வெடித்தது! நெருப்புக் குழம்பை வாரி இறைத்தது! அதிபயங்கர காட்சியாகத் தோற்றமுற்றது.

10,717 அடி உயரத்திற்கு எழுந்துள்ள எட்ணு மலையின் வாயினின்று அனற்பிழம்பின் சுவாலை செக்கச் செவேலென்றும் தகதகவென்றும் பீறிட்டுக் கொப்பளித்தது—20 மைல் தூரத்திற்கப்பாலுள்ள ஸிஸிலி கடற்கரை வாசிகளுக்கு அன்றிரவு ஏதோ வெகு அருகில் நிகழும் அதிபயங்கரத் திச்சேட்டையெனத் தோன்றிற்ரும்!

இதைப்போன்ற பயங்கர எரிப்பு எட்ணு எரிமலையில் நவம்பர் 10, 1950-ல் தான் நிகழ்ந்ததாம். அப்போது வழிந்து விழுந்த நெருப்புக் குழம்பின் வெம்மையால் அருகிலுள்ள பயிர்பச்சைகள், மரஞ்செடிகொடி, விலங்கினங்கள், மக்கள் யாவும் தீய்ந்து மாண்டனவாம். அதற்கடுத்து ஐந்தாண்டுகள் கழித்து இப்போதுதான் இந்த எரிப்பு நிகழ்ந்திருக்கிறதாம்!

தன் கொடுமை எத்துணையளவு என்பது இனி எழும் செய்தியினின்றுதான்

8-ம் பக்கம்

குறிப்பு :—

பாலத்து வாசியின் பேச்சோடு ஓடிய அத்தியாயம் முடிந்திருந்தது. அந்த விபரீதப் பேச்சுக்குப் பதில் தந்து...இந்த அத்தியாயத்தையும் துவக்கி வைக்கிருள் வனஜா.

*

38

"நாய் வேடம் போடும் நரியே உன் நயவஞ்சகம் புரிந்து விட்டது. யோக்கியதைக்கு மதிப்புரையைக் கேட்க நான் விரவில்லை. அயோக்கியத்தனத்தின் அஸ்தமனத்துக்கு வழிகாட்டு! உன் இநம்புக் கால்களால் என் லட்சிய இதயத்தைக் கசக்கிவிடாதே!'

'சோலைக்குயிலே! சுந்தரமொழிகள் உனக்குப் பிடிக்காதா? கண்ணுடி மேனியைக் கல்லால் அடிக்கக் கூடாதென்றுதான் எண்ணுகிறேன். நீயோ என்னை விபரீத புரிக்கு அனுப்புகிருய். இன்பமே...!'

'போதுமடா உன் சாகசம்!'

'கசக்கிறதா கண்ணே!'

'விஷத்தைத் தந்துவிட்டு உயிர் துடிக்கிறதா யென்று கேட்கிருயே!...கேடு கெட்டவனே!'

'அமிர்தமும்--கசக்கும்...என்ற கவிதை படித்திருக்கிருயா நீ... ஆசிரியையாயிற்றே தெரிந்திருக்குமே உனக்கு! நீலநிலவும், கோல மயிலும், ஏன் தேனும் பாலுங் கூடக் கசக்குமாமே காதல் நெஞ்சக் குமரிக்கு. உனக்கும் அப்படித் தானே, என்னவோ? ஆனாலும், நீ கவலைப்படக் காரணமில்லையே. உன் நெஞ்சத்துச் சித்திரம் நேரிலே வந்திருக்கிறேன். கொஞ்சிப் பேசு......கொத்தித் துரத்தாதே!'

'குத்திக் கொலை செய்யத் துணிந்திருக்கும் உன்னிடம்...... கத்திக் கத்திப் பேசினாலும் என் சொல்லெல்லாம் சக்தியற்றுத் தான் போகும்.'

'சத்திய மொழி பேசும் சர்க்கரைக்கட்டியே! இரவைப் பாழாக்காதே! துடிக்கும் தாரகைகளிலே உன் துடியிடையைக் காணுகிறேன். வட்ட நிலாவிலே உன் வடிவழகுதான் தெரிகிறது' என் உள்ளத்திலே கோயிலெடுத்திருக்கும் கோமளமே ... தடாகத்துத் தாமரையெல்லாம் உன்மேனியின் முன்னே மட்டமாகித்தான் காட்சி தருகிறது. நெளிந்தாடும் இந்தக் கூந்தல் மயிலாட்டும் தோகையோ? புதுமலரின் மெல்லிய இதழ்கள்தானா இந்த விரல்கள்? கடைக் கண்ணிலே கனலையும், இடையிலே ஒளியையும் தேக்கிக் கொண்டிருக்கும் இன்பச் சித்திரமே......துன்பத்தின் தூதுவனுக்கி வைக்கிருயே என்னை'

'துராத்மாவே நான் இன்னொருவனுக்காக காத்துக்கிடக்கும் கனி. உன் புகழ் மாலையைத் தாங்கிப் பூரித்துப்போகும் நிலையிலா யிருக்கிறேன். 'மானம்' கண்ணுடி வளையல்ல-உடைந்ததும் வேறுபோட்டுக் கொள்வதற்கு! நான் மான வாழ்வை இழக்காமலிருப்பதற்காக நீ மனிதனுகு. என் பெண்ணுடலை பொன்னுடலென்று புகழுகிருயே...இந்த இதயத்திலே எத்தனை புண்ணிருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டாயா நீ. என்னை அழவைத்துக்கொண்டு நீ சிரிப்பதிலேதானு இன்பம். கூவுகின்ற குயிலையும் — கத்துகின்ற கோட்டானையும் பக்கத்துப் பக்கத்திலே பார்ப்பதிலே தானு உனக்குப் பரவசம். கத்திமுனையிலே என் கற்பைக் கேட்கிருய் ரத்தக்காணிக்கை கேட்கும் ஓநாயைப் போல!

புள்ளிமானே அலைந்து தேடி வலையிலே வந்து விழுந்து கொள்வதில்லை. வேடனின் கரத்தை நோக்கிச் சிறகடித்துப் பறந்து வருவதில்லைமாடப்புரு! மானுக்கு வலையும்—மாடப்புருவுக்கு வேடனும் தேவைப்படுகிறது சிறைப்படுத்த! 'குயிலே குயிலே கூண்டுக்குள் வா' என்ருல் சிறுநடை போட்டு குறுநகை காட்டி திறந்து வைத்திருக்கும் கூண்டை நோக்கியா குயில் வருகிறது. இனிநான் உன்னிடம் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. என்னைச் சுற்றிலும் அபாயம் காத்துக்கிடக்கிறது. உன்னை வாடவைக்க அல்ல—வாழவைக்க திட்டமிட்டேன். திட்டக் கோட்டையை உன் பீரங்கிப் பேச்சால் தகர்த்து விட்டாய். வாது செய்ய நேரமில்லை. தத்துவப் பேச்சை சேகருடனேயே வைத்துக்கொள். இப்போது இந்த மாளிகையின் ஏகச்சக்ராதிபதிநான். நான் ஆணையிடுபவன்...நீயோ அடங்கித் திர வேண்டிய அடிமை! உன்போன்ற சாகசக்காரிகளைப்பற்றி நன்ருகத் தெரியும் எனக்கு...! பூங்கொடியால் புயலைத் தடுத்து நிறுத்த முடியுமா?...எங்கே முடிகிறதா யென்று பார்ப்போம்!

'தொடாதே என் கையை! மாசு படுத்தியது போதும்! என் மானத்தை மண்ணிலே புதைத்துவிடாதே! சேகர் உன் நண்பனென்று கூறுகிருயே...நண்பனுக்கா துரோகம்.

'இது துரோகமல்ல! ஐவருக்கும் பத்தினி என்று தெரிந்திருந்தும் துடியிடை துரோபதை மீது கர்ணன் ஆசை வைக்கவில்லையா? கடவுள் அவதாரங்களுக்கே அந்த வெறி யென்ருல்......எனக்கிருக்காதா தாகம். அழகுக்கு யார் போட்டி போட்டால்தானென்ன? நான் என் உயிரையே விலையாகத் தருகிறேன் உனக்காக...இவ்வளவு பெரிய விலையை யார் தர முடியும்?'

'என் சேகருக்கு செய்தி தெரிந்தால்...இந்நேரம் பிணமாகவே ஆகியிருப்பார். அவ்வளவு நெஞ்சக் காதலுண்டு எங்களுக்குள்!'

'அதுதான் இல்லை! மலைச்சாரலிலே — மதிமயங்கிய நிலையிலே நீ செய்த ஆர்ப்பாட்டங்களைப் பார்த்து விட்டான். குள்ள உருவத்தினன் மடியிலே புரண்டு நீ வீசிய ஆசை வார்த்தைகளையும் கேட்டே விட்டான். அப்படி அவன் கண்டு அதிர்ச்சியடைவதற்காகத்தானே அந்த ஏற்பாட்டை செய்திருந்தேன். அவனும் பார்த்தான் நானும் களித்தேன். உன் கோலத்தைக்கண்ட சேகர் என்ன செய்ய நினைத்தான் தெரியுமா? இப்போது யாரைத் திருவிளக்கென்று எண்ணுகிருயோ அந்த விளக்குத்தான் உன்னைச் சுட்டுப் பொசுக்கத் துடித்தது. நான் அப்போது தடுத்திரா விட்டால்—நீ இப்போது என்னோடு பேசிக் கொண்டிருக்கமாட்டாய் அன்பே! அன்னமே என்று எந்த வாயால் புகழ்ந்தானோ அதே வாயால்தான் 'அவமானச் சின்னம்' என்று கூறினான். என் திட்டத்தின் மகிமையால்தான் இவ்வளவும் நடந்து முடிந்தது. துதிபாடிய சேகரை எப்படித் தூற்ற வைத்தேன் பார்த்தாயா? இன்னும் சேகர் உன்னை நம்பி யிருக்கவில்லை. இலட்சிய இதயம் என்று கூறினாயே...உன் இதயத்திலே இலட்சிய மிருந்தாலல்லவா நான் அதை அழிக்கப் போகிறேன். எனக்கு முன்பேதான்...சேகர் அழித்து விட்டானே. இனியும் எண்ணாத எண்ணம் எண்ணி புண்ணுகிப் போகாதே! உன்னை விரும்பியவன் இப்போது வெறுப்புக் குகையிலே யிருக்கிறான். நீ அவனை நெருங்கவே முடியாது. இந்த நிலையிலேதான் நான் உனக்குக் கை கொடுக்கிறேன்.'

சேகரையும் அழைத்துக் காட்டிவிட்டாயா, உன் சூது நாடகத்தை! மோசக்காரனே சாந்த சொரூபி சேகரின் உள்ளத்தைப் புயல் வீசும் புழுதிக் காடாக்கி விட்டாயே. நம்புவாரா என்னை இனியும். பாலிலே விஷங்கலக்கும் பாதகனே நீ இப்போது எதை விரும்புகிருய் தெளிவாகக் கூறிவிடு....கதை வேண்டாம். நான் வேண்டுமா இல்லை என் உடல் வேண்டுமா?

உன்னைத்தான் என்றென்றும் என்னுடையவளாக்க விரும்பினேன். இப்போதோ உடல் கிடைத்தால் போதும் என்ற நிலைக்கு நீதான் விரட்டியடித்திருக்கிருய். இப்போது பசிக்கிறது. நிரந்தரமான கனிச் சோலைக்கு வழி தேடவில்லை. காத்திருக்கும் கனி கிடைத்தால் போதும்.

(அடுத்த வாரம்)

பம்பாய்

திருவள்ளுவர் கலா மன்ற கூட்டம் 10-7-55 மாலை 6-மணிக்கு வி. கே. வாடி குடிஅரசு நிலையத்தில் தோழர் எஸ். எம். தேவராஜ தலைமையில் நடைபெற்றது கடிதப் போக்குவரத்துகளும் கடந்த கூட்ட நிகழ்ச்சிகளும் செயலாளர் உ. அ. செ. வால் வாசித்து ஒப்புக் கொள்ளப்பட்டது. மன்ற பொருளாளர் எம். எஸ். சிங்கராஜ சொந்த அலுவலின் காரணமாகத் தாயகம் சென்றுவிட்டபடியால் தோழர் பி.எஸ். கலைச்செல்வன் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மன்ற முன்னாள் தலைவர் எஸ். மகராசன் தந்தை சிவன் தாயகத்தில் இயற்கை எய்தியமை குறித்தும் தோழர் வி. எ. ஆறுமுகப் பெருமாள் அவர்களின் செல்வன் ஜெயகுமார் இயற்கை எய்தியமைக்கு வருந்தியும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மன்ற நலன்கருதி தோழர்கள் கட்டணத்தை மாதம் தவருமல் செலுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது. தோழர்களான சிவராஜ அலிமகமது ஆகியோர் புதிய உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப் பட்டது.

வானவில்

பொறுமை இழத்தல் இயற்கை. ஆனால் தகுதியான ஆளிடம், சரியான சமயத்தில், வரம்பு மீருமல், நல்ல விளைவைக் கருதி, ஒழுங்கு முறையில், கோபத்தைக் காட்டுதல்தான் கடினம். அங்ஙனம் கடைப்பிடித்து ஒழுகுவதானது சிறப்பினுள் எல்லாஞ் சிறப்பு.

—அரிஸ்டாடில்

தட்டி வீடோ, மாடி வீடோ, எதுவாயினுஞ்சரி. அங்கே நிலவ வேண்டியது அன்பு, அன்பு. அவ்வண்பு நிலவா வீடு, மிருகங்கள் பதுங்கி வாழ் இருட்குகையாம்.

—இங்கர்சால்

எங்கெங்கு இரகசியம் கடைப்பிடிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறது என்பதாக அர்த்தம்.

—சர். வால்டர் ஸ்காட்

திருவிழா திருவிழாவெனச் செயர்க்கைத் தீ நெறி பற்றித் திரிபவர்க்குப் பெரிதும் இரங்குகிறேன்.

—திரு. வி. க.

வானுலகத்திற்கும், மண்ணுலகத்திற்குந் தபாற் கொண்டு செல்லுஞ் சேவகனுக நாரதனை யுண்டாக்கிக் கதைகள் கட்டி விட்டனர் பார்ப்பனர்.

—மறைமலையடிகள்

சாதி வேற்றுமைகளைப் பாராது 'ஏனையோருடனும்' உண்ணல் கலத்தல்களைச் செய்து உண்மையன்பினுல் ஊடுருவப் பெற்ருலன்றிச், சாதிவேற்றுமை செருக்கினுற் சிரியராய் நிற்கும் நாம் அதனை யகன்று அன்பினுற் பெரியராய் நிற்கும் பேரின்ப நிலையினை எய்துதல் இயலாது.

—மறைமலையடிகள்

வளைப்பு : 'டபிள்யூ'

திராவிடன்

சென்னை : 15—7—55 : வெள்ளி

நால்வர் மாநாடு

*

உலக சமாதானத்தை நிலைநாட்ட உள்நாட்டிலுள்ள முக்கிய பிரச்னைகளைக் கூட அலட்சியப்படுத்திவிட்டு, ரஷ்யாவிலும் அதன் தோழமை நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்துவந்த இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர் அவர்கள் இனிதே டெல்லிக்குத் திரும்பியுள்ளார். இதற்காகவும் சுற்றுப் பயணத்தின்போது அவருக்கு அந்தந்த நாடுகளில் தரப்பட்ட மகத்தான வரவேற்பு உபசாரம் ஆகியவைகளைக் கண்டும் நாம் மகிழ்ச்சி யடைகிறோம்.

அதுமட்டுமா ! வெளிநாட்டிலிருந்து திரும்பி தனது தாய் நாட்டில் காலடி யெடுத்துவைத்த இந்தியப் பிரதமரை பம்பாயில் பூரண கும்பம் முதலிய சம்பிரதாயப் பெருமைகளுடன் வரவேற்று திருஷ்டி கழித்த விவரத்தை செய்தித்தாள்களின் வாயிலாக அறிந்தும் மகிழ்ச்சி யடைந்தோம்.

நேரு பண்டிதரின் இச்சுற்றுப் பயணத்தின் வாயிலாக உலக சமாதானம் நிரந்தரமாகி விடப்போகிறதென்று தேசியத் தலைவர்களும், தேசிய இதழ்களும் நாள் தவறாது ஆருடம் கணித்து வந்துள்ளனர். அதற்கேற்ப அண்மையில் நடைபெறப் போகும் நான்கு வல்லரசுகளின் பிரதமர்கள் மாநாட்டில் உலக சமாதானத்துக்கு முட்டுக்கட்டையா யிருந்துவரும் எல்லாத் தடைகளும் தூள் தூளாக்கப்படும் என்றும் அந்த அளவுக்கு நேரு பண்டிதர் அவர்கள் ரஷ்யப் பிரதமர் புல்கானின், பிரிட்டிஷ் பிரதமர் ஈடன், அமெரிக்கா ஜனாதிபதி ஐஸன்ஹவர் ஆகியோருக்கும் ஏனையோருக்கும் மனவளம் உண்டாகும்படியான மகத்தான காரியத்தை சாதித்து விட்டார் என்றெல்லாம் இந்திய தேசியப் பத்திரிகைகள் வெளிச்சம் போட்டு பிரச்சாரம் செய்து வருகின்றன.

நேரு பண்டிதரை பிரதமராகக் கொண்டுள்ள இந்திய சர்க்காரின் ஆட்சிமுறையில் ஒழுக்கு முக்கிய கருத்து வேறுபாடுகளிலிருப்பினும் கூட வெளிநாட்டுப் பிரச்னையிலாகிலும் இந்தியப் பிரதமர் உருப்படியான காரியத்தைச் சாதித்தார் என்றால் அந்த பெருமையை மனதார வரவேற்கவே செய்வோம்.

உள்ளூரிலே ஓணான் பிடிக்க முடியாத ஒருவர், அயலூரிலே யானையைப் பிடித்தார் என்றால் அதுவும் அந்த அதிசயச் செய்தி உண்மையா யிருந்துவிட்டால் என்ன தானிருந்தாலும் உள்ளூர்வாசிகள் பெருமை படத்தானே செய்வர். அதுபோலவே இந்தியப் பிரதமரின் சுற்றுப் பயணத்தால் உலக சமாதானம் நிலைபெற்றது என்ற செய்தி செயலளவில் நிறைவேற்றப்பட்டால் அதற்குரிய திறமையை அனைவரும் பாராட்டத்தானே வேண்டும். அதுதான் மனிதப் பண்புங்கூட.

எனவே அண்மையில் நடைபெறப் போகும் நால்வர் மாநாட்டின் வெற்றி, தோல்வியைக் கொண்டே இந்தியப் பிரதமருக்கு ரஷ்யா போன்ற நாடுகளில் அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்பு, உபசரிப்பு ஆகியவைகள் ஓர் உயரிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அளிக்கப்பட்டதா அல்லது வெறும் கண்காட்சியா 'தாஜா' செய்து அனுப்பும் வித்தையா என்பதை உலக மக்களும் குறிப்பாக இந்தியத் துணைக்கண்டத்தில் வாழும் அனைவரும் திட்டவட்டமாகத் தெளிவாகப் புரிந்துக் கொள்ளும் சந்தர்ப்பமும் ஏற்படத்தான் போகிறது.

நம்மைப் பொறுத்த வரையில் நான்கு வல்லரசுகள் மாநாடு வெற்றிகரமாக முடிய வேண்டுமென்றே ஆசைப்படுவதால் அவ் வெற்றிக்குத் தடையாயுள்ள பிரச்னைகளை நான்கு வல்லரசுப் பிரதமர்களுக்கும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரிலிருந்து நான்கு வல்லரசுகளின் பிரதமர்கள் வரை எதிர்பார்க்கும் உலக சமாதானத்துக்குத் தலையாய தடையாய் இருப்பது மக்கள் சீனத்துக்கு ஐ. நா. சபையில் இடமளிக்க மறுத்துவரும் "பிடிவாத ரோகமே"யாகும். இன்றுள்ள உலக அரசியல் சூழ்நிலையில் மக்கள் சீனத்தை ஒடுக்கப்பட்டவர் நிலையில் பாவித்துக் கொண்டு உலக சமாதானத்திற்காக உலகம் சுற்றுகிறோம் அல்லது வல்லரசுகள் மாநாடு கூட்டுகிறோம் என்று பெருமைப் படுவதானது வரட்டுக் கூச்சலுக்கே ஒப்பாகும்.

எனவே நான்கு வல்லரசுகளின் பிரதமர்கள் மாநாட்டில், மக்கள் சீனத்தை ஐ. நா. சபையில் உறுப்பினராக ஏற்க மனமார அழைப்பதென்ற முடிவுக்கு வந்தாலே உலக சமாதானத்துக்கு வல்லரசுகள் உண்மையிலேயே முதற்படியில் காலடி எடுத்து வைக்கத் துணிந்தது என்று கூறலாம்.

இப்பிரச்னையின் வெற்றித் தோல்வியைப் பொறுத்துத்தான் நான்கு வல்லரசுகளின் பிரதமர்கள் மாநாட்டில் உருப்படியான திட்டங்களையும் உலக மக்கள் எதிர்பார்க்க முடியும்.

இம்மாநாட்டில் மக்கள் சீனத்துக்கு ஐ. நா. சபையில் இடமளிக்கும் பிரச்னையை கொண்டு வராமலோ அல்லது நாசுக்காக ஒத்தி வைத்துவிட்டோ மற்றபிரச்னைகளைப் பற்றி வல்லரசுகள் வாய்க்கிழியப் பேசுமானால் அது கேலிக் கூத்தாகவே முடியும் என்பதை நினைவூட்டுகிறோம்.

அதுபோலவே நால்வர் மாநாட்டில் மக்கள் சீனத்தைப்பற்றிய பிரச்னையை கவனிக்கப்படவில்லை யெனில், உலகசமாதானத்துக்கு இந்தியா பாடுபடுகிறது அதற்காகவே நேரு பண்டிதர் உலகம் சுற்றி வருகிறார் என்பது உண்மையானால் வெளிநாட்டுக் கொள்கையில் மேலும் 'நடுநிலைமை" என்ற மாடலைப் பின்பற்றாமல் தனது கருத்தை ஐ. நா. சபையில் கண்டிப்பாகத் தெரிவிக்க வேண்டுவதுடன் அதைமதிக்கவில்லையெனில் ஐ. நா. சபையைப் பொறுத்தவரை இந்தியா எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதிலும் உறுதியான எண்ணமும் ஆற்றலும் இந்திய சர்க்காருக்கு குறிப்பாக நேருபண்டிதருக்கு உண்டாகவேண்டும். இல்லையெனில் எல்லாம் ஏமாற்றுப் படலமாகவே முடியும் என்பதை சம்பந்தப்பட்ட எல்லா நாடுகளுக்கும் பணிவன்புடன் எடுத்துக் காட்டுகிறோம்.

லோகநாதன் - தனலட்சுமி

●

10-7-55 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சென்னை — மீர்சாகிப்பேட்டை வெங்கிடாசல முதலித் தெரு 128-ம் எண் இல்லத்தில் தோழர் கோ. இளவரசு தலைமையில்தோழர் லோகநாதனுக்கும் தோழியர் தனலட்சுமிக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர் மு. கிருட்டிணமூர்த்தி, தோழியர் ஆரோக்கியமேரி (நர்ஸ்) ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். 'திராவிடன்' ஆசிரியர் என். வி. நடராசன் அவர்கள் மணமக்களை வாழ்த்தியும்—பாராட்டியும் சீர்திருத்த திருமணம் என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார். இதன் நினைவாக 'திராவிடன்' வளர்ச்சிக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றி—நிர்வாகி.

பெங்களூரில்

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

அவர்களின் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

●

17—7—55 ஞாயிறு

காலை 7-30 மணி	புகைவண்டி நிலையத்தில் வரவேற்பு
" 10 மணி	பிளாக் பள்ளியிலுள்ள அப்பாவு பிள்ளை பள்ளியில் பெங்களூர் மாவட்ட தி. மு. கழகத் தேர்தல்.
" 11 மணி	உறுப்பினர் கூட்டம்.
மாலை 4 மணி	ஊர்வலம் (பொதுச்செயலாளருடன்) சீராமபுரம், இலக்குமணபுரி, அக்கிப்பேட்டை ஆகிய பகுதிகளில்.
" 6 மணி	சிக்கலால்பாக்கில்—தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில் பொதுக் கூட்டம்.

ஆக இந்நிகழ்ச்சிகளில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கலந்துகொள்வார்.

வேலூர் வேலப்பாடி இளைஞர் தி. மு. கழகம்

17—7—55 ஞாயிறு மாலை 6-மணிக்கு வேலப்பாடி கழனிகாட்டு திடலில் கோ. கிருஷ்ணன் தலைமையில் மாபெரும் கூட்டம் நடைபெறும், தோழர்கள் என். வி. நடராசன், முல்லை சத்தி. கருத்தோவியன் சொற்பொழிவாற்றுவர்,

மதுரை நகர் தி. மு. கழகம்

17—7—55 ஞாயிறு மாலை 6-30-மணிக்கு மதுரை கீழ் மார்கட் அனைணு திடலில், மும்முனைப் போராட்ட நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் நாஞ்சில் கி. மனோகரன், மதுரை எஸ். முத்து பேசுவர் அன்று காலை 10-மணிக்கு ஆரப்பாளையம் லால்குடி நடராசன் நினைவுப் படிப்பக ஆண்டு விழா நடைபெறும்.

பம்பாய் அந்தேரி தி. மு. கழகம்

17—7—55 ஞாயிறு மாலை 4-30-மணிக்கு அந்தேரி தி. மு. க. செயற்குழு கூட்டம் அதன் அலுவலகத்தில் நடைபெறும். அது சமயம் கழக வளர்ச்சிக்கான திட்டங்களை விவாதித்து முடிவு செய்யப்படும், உறுப்பினர் அனைவரும் இதையே அழைப்பாக கருதி வருமாறு வேண்டுகிறேன், எனசெயலாளர் எல். எம். பாண்டியன் அறிவிக்கிறார்.

வீராசாமி—கோவிந்தம்மாள்

●

7—7—55 வியாழன் காலை 9-மணிக்கு திண்டிவனம் அடுத்த தைலாபுரத்தில் திண்டிவனம் தி. மு. க. தோழர் எஸ். நடராசன் தலைமையில் தோழர்கள் என். வி. நடராசன் ஆசிரியர் விசுவநாதம், ராமாநுசம் ஆகியோரின் பாராட்டுரையுடன் நடைபெற்ற தோழர் வீராசாமி—கோவிந்தம்மாள் திருமணத்தின் நினைவாக 'திராவிடன்' வளர்ச்சிக்கு ரூபாய் 2 நன்கொடையாக அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம். நன்றி—நிர்வாகி.

அடுத்த வாரம்

தேசிய மொழியாக இந்தி திணிக்கப்பட்டதால் பம்பாய் மாகாணத்துக்கு நேர்ந்துள்ள அவதியை படம் பிடித்துக் காட்டும் வகையில், மைசூர் டெக்கான் ஹெரால்டு ஆசிரியர் போத்தன் ஜோசப் அவர்கள் தமது இதழில் 'பம்பாய் மௌடீகம்' என்னும் தலைப்பில் தீட்டியுள்ள கருத்துரை தமிழாக்கபபட்டு, 22—7—55 திராவிடன் இதழில் வெளிவரும். தென்னாட்டிற்கு ஆசிரியர் போத்தன் ஜோசப் அவர்களின் இக்கருத்துரையும் ஓர் விளக்கமாகத் திகழும்.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

ஜூன் முடிய பட்டியல் தொகையை—20—7—55-க்குள் அனுப்பி வைக்காத ஏஜெண்டுத் தோழர்களுக்கு முன்பணப்படி கணக்குப் பார்த்து அதற்கேற்ப பத்திரிகை அனுப்ப இயலாது என கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி—திராவிடன்

உண்மை பெரிதா? ஓவல்டின் பெரிதா?

"என்னுடைய தாய் ஒரு வாரம் பட்டினி கிடந்தால் நான் சகித்துக் கொள்வேன். ஆனால் ஒரு மணி நேரம் நிர்வாணமாகத் திரிந்தால் என்னால் சகித்துக் கொள்ள முடியாது இப்போது சொல்லட்டும் மானம் பெரிதா! சோறு பெரிதா!

இன்னும் கூட சொல்லுவேன். மானம் உருவில்லாதது சோறு உருவுள்ளது. ஒரு உருவுள்ள பொருளை உருவில்லாத மற்றொன்றுடன் ஒப்பிட்டுப் பேசுதல் எப்படிப் பொருந்தும்.

நான் கேட்கிறேன் கம்யூனிஸ்டுகளை, உண்மை பெரிதா! ஓவல்டின் பெரிதா! என்று. என்ன பதில் சொல்வார்கள் அவர்கள்!"

இவ்வாறு மாநில மாநாட்டு நிதிக்காக சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் கோகலே மன்றத்தில் 10—7—55 காலை நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் பேசினார். கூட்டத்திற்கு தோழர் ஆ. மீ அலிசேக்மன்சூர், அவர்கள் தலைமை வகித்தார். எதிர்பாராத விதமாக கூட்டத்தில் கலந்து கொண்ட சி. பி, சிற்றரசு அவர்களும் பேசினார். கூட்டத் துவக்கத்தில் தோழர்கள் குடந்தை சீனிவாசன், இரா. சண்முகம் ஆகியோர் இயக்கப் பாடல்களைப்பாடி இசைவிருந்தளித்தனர். இந்தக்கூட்டத்தில் செலவு போக மாநில மாநாட்டு நிதிக்காக ரூபாய் 257—12—0 மிச்சப்படுத்தப்பட்டது.

திருச்சியில் கூட யிருக்கும் மாநில மாநாட்டைப் பற்றியும் அதனுடைய முக்கியத்துவத்தைப் பற்றியும், மாநில மாநாட்டின் வெற்றிக்காக கழகத் தோழர்களின் கடமைகளைப் பற்றியும் குறிப்பிட்டுவிட்டு தோழர் சீனிவாசன் 'எது தேவை' என்ற தலைப்பில் தொடர்ந்து பேசியதாவது:—

எதுதேவை என்ற தலைப்பில் பேசஏன் நான் சம்மதித்தேன் என்றால் ஏறத்தாழ 1½-மாதங்களுக்கு முன்னர் நாட்டிலே ஒரு பிரச்னையை கிளப்பி விட்டனர் சிலர், 1½-மாதங்களுக்கு முன் நம்முடைய கம்யூனிஸ்டு நண்பர்களுக்கு எது தேவை என்று புரியாமல் போய் விட்டது. இதுவரையில் நம்முடைய கழகத் தோழர்கள் பலர் அதற்குப் போதுமான கருத்து விளக்கம் கொடுத்திருந்தாலும் புரியாத கம்யூனிஸ்டு தோழர்களுக்கு நான் மேலும் விளக்க ஆசைப்படுகிறேன்.

மதுரையில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் வரவேற்பு பெறுவதற்கு வந்த போது மதிப்பிற்குரிய கம்யூனிஸ்டு நண்பர்கள் மானம் பெரிதா! சோறுபெரிதா என்ற சுவரொட்டிகளைத் தொங்க விட்டிருந்தார்களாம்!

மானம் பெரிதா சோறு பெரிதா என்ற கேள்வி பொருத்தமானதா! மானம் உருவில்லாதது. சோறு உருவுள்ளது. ஒரு உருவுள்ள பொருளை உருவில்லாத மற்றொன்றுடன் ஒப்பிட்டுப் பேசுதல் எப்படிப் பொருந்தும்! நான் கேட்கிறேன் கம்யூனிஸ்டுகளை உண்மை பெரிதா, ஓவல்டின் பெரிதா என்று. என்ன பதில் சொல்வார்கள் அவர்கள்!

நம்முடைய பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் பார்த்து பரத நாட்டியத்தில் இதுபெரிதா! அது பெரிதா! என்று கேட்டால் அவர்களை என்னவென்பது! அதைப் போலத் தான் நம்முடைய கம்யூனிஸ்டுகள் நம்மைப் பார்த்து இது தேவையா! அது தேவையா! என்று கேட்கின்றனர் சிறு குழந்தைகளைப் பார்த்துக் கேட்பதைப் போல!

இரவல் இலக்கியத்தைப் படித்து விட்டு இதோபதேசம் செய்யாதீர்!

தோழர். டி. கே. சீனிவாசன் சிறப்புரை

மானம் பெரிதா! சோறு பெரிதா! என்று கேட்கிறீர்களே! யாருக்கு! யாருக்கு மானம் பெரிதா! சோறு பெரிதா என்னும் கேள்வி. அவர்களுக்கு நம் கட்சி வாயிற்படி ஏறும்போதுதான் சோறு நினைவுக்கு வந்து விடுகிறது.

இவர்கள் ஆச்சாரியாரைப் பார்த்து ராமாயணம் பெரிதா! சோறு பெரிதா! என்று கேட்பதில்லை.

சிதம்பரத்துக்குச் சென்றால் கும்பாபிஷேகம் பெரிதா—சோறு பெரிதா என்று கேட்கத் தோன்றுவதில்லை, கிருபானந்தவாரியாரிடம் காலட்சேபம் பெரிதா சோறு பெரிதா என்று கேட்பதில்லை. பெரும் பெரும் முதலாளிகளைப் பார்த்துக் கேட்பதில்லை. மிராசுதார்களைப் பார்த்துக் கேட்பதில்லை உணவு மந்திரியைக் கூடப் பார்த்துக் கேட்பதில்லை. இந்த விசித்திர கம்யூனிஸ்டுகளுக்கு நம் வீட்டருகில் வரும்போது தான் பசி எடுத்துக் கொள்கிறது.

இவர்கள் நம்மைப் பார்த்து மானம் பெரிதா சோறு பெரிதா என்று கேட்பதன் காரணம், நாம் மானத்தைப் பற்றிப் பேசுவதால்தான்.

'பராசக்தி' திரைப் படத்திலே ஒரு கட்டம். ஒரு அனாதையான பெண். அவளுக்கு மூன்று சகோதரர்கள் மூவரும் ரங்கூனில் வாழ்கிறார்கள். தாய் தந்தையற்ற அவள் விதவையாகி அவளுக்கிருக்கும் ஒரே குடிசையில் இட்லி சுட்டு விற்கிறாள் கடனுக்கு. அந்த ஊரில் ஒரு செல்லப்பிள்ளை, ஒருநாள் அவன் அவளிடம் தகாத முறையில் பேசினான். இந்த இடத்தில் நீங்கள் கொஞ்சம் சிந்தனையில் காணுங்கள் நான் கூறும் காட்சியை, அந்த மைனர் இட்லி சுட்டு விற்கும் பெண்ணைப் பார்த்து 'மானம் பெரிதா! சோறு பெரிதா!' என்று கேட்பதாக கற்பனையில் காணுங்கள். நீங்கள் அவனை என்னவென்றழைப்பீர்கள், கூட்டத்தில் கூடியிருக்கும் தோழர்களில் யாராவது ஒருவர் கூறுங்கள் போதும்! சமுதாயத்தில் அவனுக்குப் பெயர் அயோக்கியன். ஆனால் அரசியலில் அந்த ஆளுக்குக் கொடுக்கப்பட்டபெயர் கம்யூனிஸ்டு. ஏதோ ஒரு பிச்சைக்காரர் கூட்டத்தைப் பார்த்துக் கேட்பதைப் போல நம்மைப் பார்த்து மானம் பெரிதா! சோறு பெரிதா என்று கேட்கலாமா! என்னுடைய தாய் ஒரு வாரம் பட்டினி கிடந்தால் நான் சகித்துக் கொள்வேன், ஆனால் ஒரு மணி நேரம் நிர்வாணமாகத் திரிந்தால் என்னால் சகித்துக் கொள்ள முடியாது; இப்போது சொல்லட்டும் மானம் பெரிதா! சோறு பெரிதா! மனிதனிடத்தில் பேசத் தகாததையெல்லாம் பேசுகின்றனர் இந்தக்கம்யூனிஸ்டுகள். ஆனால் இப்போது அவர்களே கொஞ்சம் சுரம் குறைத்துக் கொண்டார்கள். காரணம் நெடுஞ்செழியன் அவர்கள் தெளிவாகக் கூறி விட்டார்கள் 'சோறு தேவை அதுவும் மானத்தோடு தேவை' என்று

கடந்த 25 ஆண்டுகளாக எதுதேவை என்று கேட்டு வந்த நம்மைப் பார்த்தே இவர்கள் இது தேவையா! அது தேவையா! என்று கேட்கின்றனர்.

'பையன் வளர்ந்து விட்டான். மணம் செய்ய வேண்டியபருவம். அவன் காலில் ஒரு கட்டையை கட்டிவிட வேண்டும்' என்று அவன் தந்தை மூன்றும் மனிதனிடம் சொல்லிக் கொண்டிருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். உடனே அந்த மூன்றும் மனிதர் 'எனக்குத் தெரிந்த இடத்தில் பெண் இருக்கிறது' என்று கூறுகிறார். இந்ததந்தை பெண் அழகாக இருக்கிறாளா, பையனுக்கு ஏற்றவள்தானா என்று கேட்காமல் பெண்ணின் ஜாதகத்தைக் கேட்கிறார். இது தேவையா! கேட்டவர்கள் நாம்!

ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைக்கும்போது ஐயர்—அவர் சொல்லும் மந்திரம் — அக்கினி —அம்மி— அதில் இருந்து பார்க்கும் அருந்ததி இவைகள் எல்லாம் தேவையா! கேட்டவர்கள் யார்—நாம்தானே.

இந்நாட்டின் தேவைகளைக் கேட்டவர்கள் நாம். அப்படிப்பட்ட நம்மைப் பார்த்தே இவர்கள் எது தேவை! என்று கேட்கின்றனர்.

நோஞ்சலாக இருக்கும் ஒருவன்—ஏன் என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன்—நான் அண்ணா சிற்றரசு போல அவர் இளமையில் இருந்தது போல— ஆக நினைத்து, புத்தகத்தைப் படித்து விட்டு தினசரி இரண்டு அவுன்ஸ் வெண்ணை, இரண்டு முட்டை தின்று வந்தால் ஒரு வாரத்தில் நான் காலியாவேனே அன்றி சிற்றரசு போலவா ஆக முடியும். முதலில் எனக்கு செறிக்கும் தன்மை ஏற்பட வேண்டும். அதற்கானவ செய்ய வேண்டும், அதை விடுத்து புத்தகத்தைப் படித்து விட்டு அதிலிருப்பதை போலச் செய்தால் நலன் காண முடியுமா! அதைப் போலத்தான் நம்முடைய கம்யூனிஸ்டு நண்பர்கள்— தன்னுடைய நாட்டு நலனுக்காக ரஷ்யா தீட்டும் திட்டங்களைப் பார்த்து விட்டு —அதைப்போல இங்கும் அமுல் நடத்த வேண்டும் என்று கூறுகிறார்கள். இரவல் இலக்கியத்தைப் படித்து விட்டு அதுவே இங்கும் வேண்டும் என்று கூறுகிறார்கள்.

ஒருவனைப் பார்த்து நீ ஏனப்பா பட்டினி கிடக்கிறாய் என்று கேட்டால், ஏதோ என் தலைவிதி என்று கூறி சும்மா இருந்து விட்டால் சோறு கிடைக்குமா! அவனுக்கிருக்கும் அந்த மூட நம்பிக்கையைப் போக்கிய பின்னர் தானே சோறு கிடைக்கும், டாக்டர் முதலில் நோயை தீர்த்து விட்டு டானிக்கைத் தருவார், நீ நோய் உள்ள போதே டானிக் தருகிறாய்.

சுவிட்சர்லாந்துக்கு செல்வார்கள் ஓய்வுபெற சீமான்கள் சிலர், இங்குள்ள சீமான்கள் கொடைக்கானல், உதகமண்டலத்திற்கு செல்வார்கள். அவர்கள் முகமெல்லாம் மகிழ்ச்சியால் மலர்ந்திருக்கும். ஆனால் ஒரு மனிதன் சுடுகாட்டில் உலவிவிட்டு வந்தால் அவன் முகத்தைப் பார்த்தே கூறிவிடலாம் இவன் சுடுகாட்டில் இருந்து வந்தவனென்று. காரணம் சூழ்நிலை அப்படி. அதைப் போல பிறநாட்டு மக்கள் வளமுடன் வாழ்கிறார்கள் என்றால் அவர்களது சமுதாயச் சூழ்நிலை வேறு. நம்முடைய சமுதாயச்சூழ்நிலை எங்கேஉள்ளது அப்படி.

நம்முடைய சமுதாயத்திலே கோயிலுக்கு செல்பவன் ஏதோ ஒரு சுயலாபத்துக்கே செல்கிறான். டாக்டரிடம் செல்பவன் தன் நோயை தீர்த்து வைக்கும்படிக் கூறுகிறான். கோயிலுக்கு செல்பவன் ஆண்டவனிடம் தன் குறைகளைக் கூறி முறையிடுகிறான். இப்படியிருக்கிறது நம் சமுதாய நிலை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பூம்புகாரில் சிலப்பதிகார மாநாடு ஒன்று நடந்தது. அதற்கு ஆர். கே. சண்முகம் செட்டியார் தலைமை வகித்தார். அந்த மாநாட்டில் கோவலன் வாணியச் செட்டியாரா நாட்டுக்கோட்டைச் செட்டியாரா என்ற பிரச்னை எழுந்தது இப்பிரச்னை எழுந்ததற்கே காரணம் மாநாட்டுக்குத் தலைமைவகிக்க தகுதி படைத்தவர் ஆர். கே. சண்முகம் செட்டியாரா! ராஜா சர் முத்தையா செட்டியாரா என்ற பிரச்னைதான்! இந்த அளவுக்கு நம் சமுதாயம் கிடக்கிறது.

இப்போது ஆச்சாரியார் அணுகுண்டுகளை கொண்டு சென்று கடலில்போடு என்று கூறுகிறார். ஆச்சாரியார் ஏன் இதில் தலையிடுகிறார். இந்த அகில உலகப் பிரச்னைக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம். எத்தனையோ வல்லரசுகளின் பிரதமர்கள் —தலைவர்கள் —அகில உலகத் தலைவர்கள் எல்லாம் இருக்கும்போது அணுகுண்டுகளைக் கடலில் போடு என்று கூற ஆச்சாரியார் யார்!

அணுகுண்டுகளால் போர் மூளுகிறது ஆகவே அணுகுண்டை கடலில் போடுங்கள் என்று கூறும் இதே சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு புத்தகம் எழுதினார். அந்தப் புத்தகத்தின் பெயர் 'கண்ணன் காட்டிய வழி' அதில் பகவத் கீதையின் சாரமே உள்ளது. அப்புத்தகத்தில் ஒரு கட்டம். ஒரு போர்க்களம். போர்க்களத்திலே அர்ச்சுனன். அவன் தோளிலே அம்புறாத் தூணி. அதிலே அம்புகள். கையிலே வில். அருச்சுனன் அருகில் கண்ணன். எதிர் வரிசையில் துரியோதனன், பீஷ்மன் போன்றவர்கள். உடனே அர்ச்சுனன் கண்ணனைப் பார்த்து கண்ணா எதிரிலே நிற்பவர்கள் என் சகோதரர்கள்; என்னுடன் ரத்தபாசம் கொண்டவர்கள். எப்படி அவர்களுடன் போரிடுவது என்று கேட்டான்;

அதற்கு கிருஷ்ணன் அர்ச்சுனா இதையெல்லாம் கவனிக்காதே எடு வில்லை. விடு கணையை என்று கூறுகின்றான். போரினை விரும்பாத ஆச்சாரியார் இப்படி எழுதியிருக்கிறார். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இப்படிக்கூறிய ஆச்சாரியார் தான் இப்போது அணுகுண்டை கடலில் போடு என்கிறார்.

ஏன் இதைக்கூறுகிறேன் என்றால் துரியோதனர்கள் மீது சண்டை செய்ய அர்ச்சுனனுக்கு ஒரு காரணமும் இல்லை. பஞ்சபாண்டவர்களும் பாண்டுவுக்குப் பிறந்ததாகக் கூறுகின்றனர். பாண்டு ரோகம் பிடித்தவனுக்கு பிள்ளையே பிறக்காது. இது விஞ்ஞானம். இதை கம்யூனிஸ்டு நண்பர்கள்கூட உணர்தல் அவசியம்.

ஏன் ஆச்சாரியார் அணு குண்டு பிரச்சனையிலெல்லாம் தலையிடுகிறார் என்றால் தமிழ் நாட்டு அரசியலில் காமராசர் இடம் தரவில்லை, இந்திய அரசியலிலும் இடமில்லை. அகில உலக அரசியலில்

கலாச்சாரம், நாடு, பண்பாடு படைத்த திராவிடன் இன்று ஏன் வாடுகிறான்?

தலையிட்டால் எவன் கேட்பவன், தர்ம சத்திரத்தில் தூங்குபவனை தட்டி எழுப்ப ஆளில்லை. அணுகுண்டு ஒழிய வேண்டுமானால் பிரச்னை ஒழிய வேண்டும், பிரச்னையிருக்கும் வரை அணு குண்டு போனாலும் இன்னொரு குண்டு வரும்.

அடுத்தாற்போல் ஆச்சாரியார் இன்னொன்று கூறினார், விஞ்ஞானம் வளர்ந்து விட்டதால் ஆபத்து வளர்ந்து விட்டது என்றும் அணுகுண்டு, விஞ்ஞானம் வளர்ந்ததால்தானே கண்டு பிடிக்கப்பட்டது என்றும் கூறுகிறார். விஞ்ஞானத்தால் ஆபத்தில்லை

விஞ்ஞான மலர்ச்சிகளான மின்சார விளக்கு—மணிகாட்டும் கடிகாரம்—வேகமாக ஓடும் ரயில் இவைகளும் விஞ்ஞானம்தான், அப்படியானால் இந்த விஞ்ஞான வளர்ச்சிகளும் ஆபத்துதானா!

விஞ்ஞானம் வளர்ந்ததினாலா தவறு. இல்லை மலர் இருக்கிறது—மலர்த் தோட்டத்தில், நாம் பார்க்கிறோம் மகிழ்கிறோம். ஒரு மங்கை வருகிறாள். பார்க்கிறாள், பறிக்கிறாள். கேசத்தில் சூட்டிக் கொள்கிறாள். மூன்றாவதாக ஒரு குரங்கு வருகிறது. அது என்ன செய்யும்? ஆகவே விஞ்ஞானமும் அப்படித்தான் பயன்படுகிறது. விஞ்ஞானம் நல்லதுக்கு பயன்படாததின் காரணம் மனிதனின் மனம் பண்படவில்லை. மனிதனின் மனம் பண்படாததின் காரணம் மனிதனை பண்படுத்தத் தவறி விட்டது மதம். மனிதனை நல்லதுகளைச் செய்யவில்லை மதம் மனிதனின் மனம் நல்லதைச் செய்ய பண்படாத காரணத்தினால்தான் விஞ்ஞானம் கெட்ட செயல்களுக்கும் பயன்படுகிறது.

எனக்கு முன் பேசிய தலைவர் அவர்கள் பேசினார்கள். தமிழரசு கழகத்தார் மாநாடு கூட்டினார்கள் என்று. அம் மாநாட்டிலே தமிழ்மொழி தனியாட்சி மொழியாக ஆகவேண்டுமென்று தீர்மானம் போட்டார்களாம். தமிழார்வம் உண்மையிலேயே இவர்களுக்கிருக்குமானால் கோயிலில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று கூறிவரும் குன்றக்குடி மடத்தம்பிரானை ஆதரித்து ஒரு தீர்மானம் போட்டார்களா? அப்படிச் செய்திருந்தால் நாம் இவர்களை பாராட்டியிருக்கலாம்.

நான் மதிப்பிற்குரிய சிவஞானத்துக்கு ஒன்று கூறுவேன். உலக வரலாற்றைப் பார்த்தால்தெரியும். ராபர்ட் கிளைவ் அந்நாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட வீணன். காலாடி! காலி! அயோக்கியன், அற்பன், முரடன், அந்நாட்டிலே வாழத் தகுதியற்றவன்! என்றெல்லாம் கூறித் துரத்தப்பட்ட ஒரு துன்மார்க்கன் இந்நாட்டிலே ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஏற்படுத்தினான்! இருநூறு ஆண்டுகள் தன்னுடைய ஏகாதிபத்தியத்தைச் செலுத்தினான்.

ஐரோப்பாக் கண்டத்திலே இருந்த ஒரு சில பிச்சைக்காரர்கள் இன்று ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே ஏற்படுத்திக்கொண்டு இன்று அகில உலகத்தையும் பணத்தாலேயே பதறவைக்கும் பரிதாபத்தைப் பார்க்கிறோம்.

வடநாட்டிலுள்ளவன் இங்கே வருகிறான். முதலில் சிறிய பெட்டிக்கடை வைக்கிறான். பிறகு மிட்டாய்க்கடை வைக்கிறான். பின் வட்டிக்கடைவைத்து இந்நாட்டையே சுரண்டுகிறான். ஆனால் தமிழன் எங்கு சென்றாலும் பிச்சைக்காரன்.

தமிழனுடன் சேர்த்து ஒப்பிடத் தகுந்தவர்கள் இன்றுள்ள நிலையில் லம்பாடிக் கூட்டம் ஒன்று. இவனைப் போலவே நரிக்குறவர் கூட்டம்—இவனைப் போலவே ஜிப்ஸிக் கூட்டம் ஒன்று.

லம்பாடிக்குக் கலாச்சாரம் இல்லை அவன் பிச்சை எடுக்கிறான்; நரிக் குறவனுக்கு நாடு இல்லை அவன் நாடோடியாகத் திரிகிறான்; ஜிப்சிக்குப் பண்பாடு இல்லை அவன் நிலையிழந்து தவிக்கிறான்; ஆனால் கலாச்சாரம், நாடு, பண்பாடு, இத்தனையும் படைத்த திராவிடன் ஏன் வாடுகிறான்.

உலகத்திலேயுள்ள மற்ற நாடுகளெல்லாம் இவனது நிலைக்குக் கீழே இருந்தன. இன்று இவனை விட பன்மடங்கு முன்னேறி விட்டன. ஆனால் மலைமேல் இருந்த தமிழன் இன்று தலைகுப்புற விழுந்து விட்டான் இந்த நிலைகளை யெல்லாம் எடுத்துக் கூறாமல் நண்பர் சிவஞானம் நம்மைப் பார்த்துக் கூறுகிறார். பார்ப்பனர்களை எதிர்ப்பதை விட்டு விடுங்கள் என்று. நாம் பார்ப்பனர்களை எதிர்த்ததேகிடையாது. நாம் பார்ப்பனர்களை எதிர்த்தால் அவர்கள் இருக்கவேமாட்டார்கள் பார்ப்பனர்களிடம் சிக்கிக் கிடக்கும் நம்முடைய தோழர்களைத்தான் மீட்கிறோம்.

நண்பர் சிவஞானம் அவர்களே நீர் ரயிலை நிறுத்தினீர்! 'நான்சென்ஸ்' என்றனர். நாங்கள் ரயிலை நிறுத்தினோம் பம்பாய், நியூயார்க், சிகாகோ போன்ற நகரங்களில் தெரிந்தது. நண்பர் சிவஞானம் அவர்களே நினைத்துக் கொள்வார் இவர்கள் ரயிலை நிறுத்தினால் உலகெங்கும் தெரிகிறது, நாம் நிறுத்தினால் நமக்கே தெரியாமல்போகிறது என்று. ஆகவே சிவஞானம் தமிழுக்காக பாடுபடுகிறேன் என்றால் என்ன செய்திருக்க வேண்டும்!

ஆச்சாரியார் இந்தியை எதிர்த்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார். எந்த இந்தியை! I. A. S. இந்தியை—கட்டாய இந்தியை எதிர்த்தல்ல. காரணம் அவர்களுக்கு அங்கேதான் கஷ்டம். என்ன எழுதுகிறார் தெரியுமா? 'ஆரிய மொழிகளில் சிறந்த தமிழ்' என்று. இதைக் கண்டு நெஞ்சு கொதிக்கவில்லை என்றால், நெஞ்சே இல்லை என்றுதான் பொருள்.

வடநாட்டில் உள்ளவர்களுக்கெல்லாம் இங்கே விளம்பரம். தென்னாட்டுப் பத்திரிகைகளைப் புரட்டினால் துக்காராம், துளசிதாஸ், மீரா போன்றோரது வாழ்க்கை வரலாறுகள் இருக்கும். ஆனால் வடநாட்டுப் பத்திரிகைகளில் பட்டினத்தார், ராமலிங்க அடிகள் போன்றோரைப் பற்றி ஒரு வார்த்தை கூட இருக்காது.

'ஔவையார்' திரைப்பட விமர்சனத்தைத் தீட்டியிருந்தது 'பிலிம்இந்தியா' சில மாதங்களுக்கு முன்னர். அதிலே ஔவையாரை 'தென்னிந்திய மீரா' என்று எழுதியிருந்தார்கள். நான் ஏன் இதைக் கூறுகிறேனென்றால் இந்த அளவுக்கு ஔவையாரை மட்டமாக்கி விட்டார்களே என்பதுதான்.

தென்னாட்டில் இருப்பவை யெல்லாம் உயர்ந்த சரக்குகள்—ஆனால் விலை போகவில்லை. வடநாட்டு சரக்குகள் மட்டமானவையா யிருப்பினும் மார்க்கெட் இருக்கிறது இங்கே.

இராமாயணக் கதையையே உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள் இராமனுடைய தந்தை இராமனைப் பார்த்து பதினான்கு வருடங்கள் காட்டுக்குப்போ என்று கூறினார். காட்டிலே இருந்த இராமன் தென்னாட்டில் காலடி எடுத்து வைத்தான். இலங்கை மன்னனின் தங்கை அவனைக் கண்டாள். காதலை சற்று தீவிரமாகத் தெரிவித்தாள் அதற்காக இராமன் அவளது அங்கத்தை அறுத்தான். உடனே இராவணனிடம் முறையிட்டாள் இராவணன் இராமனைத் தேடி வந்தான் இராமன் அங்கில்லாத காரணத்தால் அவன் தன்னை நாடி வரட்டும் என்ற நோக்கத்தால் சீதையை தூக்கிக்கொண்டு போனான், பின்னர் போர் நடந்தது. இராமன் வென்றான். இராமனை உடனே தென்னாட்டவர் கடவுளாகக் கொண்டாட ஆரம்பித்து விட்டனர்.

நெப்போலியன்—பிரெஞ்சு நாட்டு வீரன். இங்கிலாந்தையே அடிமை நாடாக்க நினைத்தவன் அப்படிப்பட்ட வீரன்—நெப்போலியனை பிரிட்டிஷ் நாட்டு வீரன் நெல்சன் தோற்கடித்தான்.

பிரான்சு நாட்டிலே ஒருவனைப் பார்த்து உன் நாட்டின் மாவீரன் யார் என்றால் நெப்போலியன் என்றுதான் கூறுவான் நெல்சன் என்று மறந்தும் கூறமாட்டான்.

வடநாட்டிலே சென்று திமிர் பேசிய கனக விசயரை வென்று மீண்டான் சேரன் செங்குட்டுவன். அவனுக்கு வடநாட்டிலே சிலை உண்டா!

கம்பன் தமிழ் நாட்டுப் பண்பாட்டைச் சொன்னான்—ஏற்றுக் கொள்கிறோம். எந்தத் தமிழ்ப் பண்பாட்டை!

சிலப்பதிகாரத்தைத் தீட்டிய இளங்கோ மாதவியை ஒரு இடத்திலாவது பழுதுபட்டவள் என்று எழுதவேயில்லை. இது தமிழ்ப் பண்பாடு.

சிறுகதை மன்னர் **புதுமைப்பித்தன்** ஒரு கதை எழுதியுள்ளார், ஒருவன் க்ஷயரோக வியாதியில் அவஸ்தைப்பட்டு படுத்த படுக்கையாய் உள்ளான். ஒருநாள் அவனது நண்பன் அவனைப் பார்க்க வருகிறான். அந்நேரத்தில் படுக்கையிலிருக்கும் நோயாளியின் மனைவி குளித்துவிட்டு ஆடைமாற்றிக்கொள்ள ஓர் அறையினுள் நுழைகிறாள். அதைக் கண்ட நோயாளியின்நண்பனும் நுழைகிறான். இந்த இடத்தில் புதுமைப்பித்தன் நினைத்திருந்தால் கம்பரைவிட எழுதியிருக்க முடியும். ஆனால் புதுமைப்பித்தன் அத்தகையவரல்ல. 'நான் மிருகமானேன்—அவள் பிணமானாள்' என்று ஒரே வரியில் முடிக்கிறார் கதையை. இது தமிழர் பண்பாடு.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஒரு கவிதை எழுதியுள்ளார். மணமான தம்பதிகள். பிள்ளைபெறுவது தொல்லை என்று நினைத்து இருக்கின்றனர். ஒரு நாள் கணவன் திண்ணையில் அமர்ந்திருக்கிறான். உள்ளே இருந்த மனைவிக்கு ஆசை அதிகமாகிவிட்டது வெளியேயிருந்த கணவனிடம் வந்து தெருவிலே பனியாயிருக்கிறதே என்று ஜாடையாகக் கூறினாள் கணவனும் தெரிந்துகொண்டேன் என்று கூறி உள்ளே செல்கிறான். இந்த இடத்தில் புரட்சிக் கவிஞர் நினைத்திருந்தால் எவ்வளவோ எழுதியிருக்கலாம். ஆனால் புரட்சிக் கவிஞர் கம்பனல்ல!—இது தமிழ்ப் பண்பாடு!

ஆனால் கம்பர் எழுதுகிறார். கன்னிப் பெண் மாடியிலே நிற்கிறாள். மகாவிஷ்ணுவின் அவதாரமான ராமன் வீதியிலே வருகிறான். ராமனைக் கண்டதும் சீதையின் உடலில் ஏற்படும் பூத, பௌதீக ரசாயன மாறுபாடுகளை யெல்லாம் எழுதுகிறான் கம்பன், இதைத் தமிழ்ப் பண்பாடு என்கிறான் ஒரு பைத்தியக்காரன்!

கண்ணகிக்கு வாழ்க்கைக் கலை தெரியவில்லை என்று அறிஞர் அண்ணா அவர்கள் பேசினார்கள். உடனே ம. பொ. சிவஞானம் சில அறிஞர்கள் இப்படி ஆராய்ச்சி செய்கிறார்கள் அது தவறு. கண்ணகியை விட்டு கோவலன் பிரிந்ததற்குக் காரணம் காமன் கடவுள் அப்படிச் செய்தான் என்று. அவர் கூறுவது என்னவென்றால் இதுகூட என் சொந்த சரக்கல்ல. பழைய சரக்குதான் என்பதே அறிஞர் அண்ணா அவர்கள் கண்ணகிக்கு கற்பு இல்லையென்று கூறினார். அவர் சொன்னது கண்ணகிக்கு வாழ்க்கைக் கலை தெரியவில்லை என்பதுதான்.

ஒரு அலுவலகத்தில் புதிதாக மணமான குமாஸ்தா வேலை செய்கிறான், எப்போது மணி ஆகும், அலுவலகத்தை விட்டு வீட்டுக்குச் சென்று மனைவி கொடுக்கும் காபியைப் பருகுவோம் என்று மணியாவதை எதிர்பார்த்திருப்பான். அவரது மனைவியோ மூன்று மணிக்கெல்லாம் அலங்காரத்தைத் துவக்கி ஐந்து மணிக்கெல்லாம் ஒரு மாதிரியாக முடித்துக் கொண்டு வாயிற்படியில் காத்து நிற்பார்கள்—கணவன் தன்னுடைய அலங்காரத்தைப்பாராட்ட வேண்டும் என்றஎண்ணத்துடன். அலுவலகத்தில் இருந்துவரும் கணவன், சோர்வு தட்டிப்போய் தாகத்துடன் வருபவன் அலங்காரத்தையா பார்ப்பான்! 'ஏன் மூதேவியைப் போன்று வழியை அடைத்துக் கிடக்கிறாய்' என்று கூறிவிட்டுதானே செல்வான். அந்த அம்மையாரே கையில் காபிடம்ளருடன் கணவரை வரவேற்றிருந்தால்...!

இந்த வாழ்க்கைக் கலைதான் கண்ணகிக்குத் தெரியவில்லை என்று அறிஞர் அண்ணா கூறினார்கள் இதை மறுக்க வேண்டும் என்று நண்பர் சிவ்ஞானத்துக்கு ஆசையிருந்தால் சிலப்பதிகாரத்தைப் புரட்டிப் பார்த்து இந்தந்த இடத்தில் கண்ணகிக்கு வாழ்க்கைக்கலை தெரிந்திருக்கிறது என்று கூறவேண்டும் இதைச் செய்யாமல் நண்பர் சிவஞானம் உன் பிரச்னையை விட்டுவிட்டு என்னுடன் வாரும் என்று கூறுகிறார். நாம் அப்படிக் கூறவில்லை. உம்முடைய பிரச்னையுடன் வாரும். உம் பிரச்னையையும் தீர்ப்போம். எங்களுடைய பிரச்னையையும் தீர்த்துக் கொள்வோம் என்றுதான் கூறுகிறோம்.

மேலும் நம்முடைய நாட்டின் அடிப்படைத் தேவைகள் உடனடித் தேவைகள் பற்றிக் குறிப்பிட்டு சுமார் 1½ மணிநேரம் விரிவுரையாற்றினார் தோழர் டி. கே. சீனிவாசன்.

மாநில மாநாட்டு நிதிக்காக

17-7-55 ஞாயிறு மாலை 6-30, இரவு 10-30 மணிக்கு

சேலம் விக்டோரியாவில் இரு நாடகங்கள்

சென்னை ராஜேந்திரன் நாடக மன்றத்தின் சார்பில்

எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, மனோரமா

எம். என். கிருஷ்ணன், இந்திரா, இந்திராணி நடிக்கும்

மணி மகுடம்

புதிய நாடகம் — கதை வசனம் : கலைஞர் கருணாநிதி

கட்டணம் : ரூ. 3, 2, 1, தரை அணா 8.

நகர தி. மு. கழகம் —ஈ. ஆர். கிருஷ்ணன் செயலாளர்



தென்றல் சிலிர்ப்பு!

நாட்டையும், மொழியையும், நேசியாதவன் பெற்ற தாயை நேசியாத பாவியாவான்.

மொழியினிடத்துப் பற்றில்லாதார் தேச சேவை, இடம் பத்தை அடிப்படையாகக் கொண்டதாக முடியும்.

தமிழ் நாட்டில் திலகர் பெருமான், காந்தியடிகள் போன்ற தேசபக்தர்கள் தோன்றாமைக்குக் காரணம் தமிழர்களிடம் மொழிப்பற்று இன்மையே யாகும்.

ஒல்லும் வகை சடங்குகளைச் சுருக்கி, அவற்றில் கண்மூடி வழக்கங்கள், நுழையாதவாறு காத்துவரல் வேண்டும்,

பிறப்பால் குறிக்கொண்டு நல்வினை தீவினைகட்குப் பண்டாரத்தையோ தேசிகனையோ பார்ப்பானையோ, பிறனையோ, அழைப்பது குருட்டு நம்பிக்கை.

பிறப்பில் உயர்வு தாழ்வு கருதி எவரையுங் குருவாகக் கொள்ளாதேயுங்கள். அக் கருத்துடன் எவர்க்கும் வந்தனை, வழிபாடு செய்யாதேயுங்கள்.

பெண்ணுலகின் நிலை கொண்டே ஒருநாட்டின் நாகரீகத்தை அளந்துணர வேண்டும்.

பெண் தெய்வங்களின் வேண்டுகோளை மறுக்க எந்த பாவிக்குத்தான் மனம் எழும்?

பெண் இல்லையேல் உலகேது? உயிரேது? அன்பேது? கடவுளேது? எல்லாம் பெண்ணால்! எல்லாம் பெண்ணில்! அத்தகைய பெண்ணை—தாயை—தெய்வத்தைப் போற்றுங்கள்! போற்றுங்கள் !!

மிகப் பழைய காலத்தில் கோயில் வழிபாடு கிடையாது. அந்நாளில் இயற்கை வழிபாடொன்றே வழக்கிலிருந்தது. மீண்டும் அவ்வழிபாட்டைப் புதுப்பிக்க வேண்டுமென்பது எனது தணியா வேட்கை.

—தமிழ்ப்பெரியார் திரு. வி. க.

நுகர்ந்துரை : 'டபிள்யூ'

ஆச்சாரியார் மடல்-தொடர்ச்சி

என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. காங்கிரஸ் மேலிடத்தாருக்கு வெறும் ஜாடை காட்டினேன். அந்த ஜாடையின் தத்துவார்த்தம் அறிந்த அபுல்கலாம் ஆசாத் என்னை உறுப்பினராக்கி விட்டார்.

அண்மையில் நடந்த பொதுத் தேர்தலைத்தான் எடுத்துக்கொள்ளுமே! நான் எங்கேயாவது பிரச்சாரத்திற்குசென்றேனா? இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ் தேர்தலில் குறிப்பிட்ட வெற்றி பெறுவதுகூட சந்தேகம் என்றுதான் ஆரூடம் கூறிவந்தேன். இறுதியாக என்ன ஆயிற்று? எனது எதிர்ப்பாளர்களே எனக்குப் பாதபூஜை செய்து பதவியில் அமர்த்தினார்கள் அல்லவா!

இவையனைத்தையும் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இப்பேர்ப்பட்ட பராக்கிரமம் படைத்த நான் சாமான்யர்களாகிய தி. மு. கழகத்தினரிடம் அடைந்த தோல்வியை எண்ணும்போதெல்லாம் வேதனையால் அவதியுறுகிறேன். என்னுடைய அரசியல் மேதாவித்தனம் என்று அனைவராலும் புகழப்பட்டு வந்த சம்பிரதாயத்துக்கு இந்த தி. மு. கழகத்தார் மூற்றுப்புள்ளி வைத்து விட்டனரே.

வர்ணாஸ்ரம கல்வித் திட்ட எதிர்ப்பு என்னையே பதவியிலிருந்து விரட்டும் என்று தெரிந்திருந்தால் தி. மு. கழகத்தினர் ஆரம்பத்தில் தங்கள் மாநாடுகளில் வேண்டுகோள் விடுத்த போதே, திட்டத்தைத் திருத்தியோ அல்லது கைவிட்டோ யிருப்பேன். தி. மு. கழகத்தினரின் சக்தியை அறிந்து கொள்ளும் முயற்சியிலும் யான் மதி மோசம் போனேன் !

என் ஆப்த நண்பர் ஒருவர்—அவர் எனக்கு மாற்றுக்கட்சியினர்தான். இருந்தாலும் அவரிடத்தில் எனக்கு நம்பிக்கையும் மதிப்பும் உண்டு அவரைக் கேட்டேன் இந்த தி. மு. கழகத்தினர் எப்படியென்று? அதற்கு அவர் ஏதோ சில சிறுபிள்ளைகள் கூடிக் கொண்டு பெரியாரை எதிர்க்கும் வேலையைத் தவிர அவர்களுக்கு வேறு வேலை கிடையாது. மக்கள் ஆதரவெல்லாம் திராவிடக்கழகத்திற்கும் பெரியாருக்கும் தான் என்றார். நானும் இதை உண்மை என்றே நம்பனேன். வர்ணாஸ்ரம கல்வித் திட்ட எதிர்ப்பை மிக எளிதில் தகர்த்தெறிந்து விடலாமென்று கருதினேன் !

1953-ம் ஆண்டு ஜூலை 14-15-ம் நாட்களில்தான் தி.மு. கழகம் என்றால் அதன் சக்தி எத்தகையது — அண்ணாதுரை அவர்களுக்கு நாட்டிலே எவ்வளவு செல்வாக்கு இருக்கிறதென்பதை உணர்ந்தேன். அவர்களின் கணக்கை நான் தீர்த்து கட்டி விடுகிறேன் என்று பேசியது அபத்தம் என்றும் நமது கணக்கை அவர்கள் முடித்து விடுவார்கள் போலிருக்கிறதே என்று அஞ்சினேன். அது போலவே நடந்தேறியும் விட்டது!

இந்த சமயத்தில் வர்ணாஸ்ரம கல்வித் திட்டத்தை வாபஸ் பெற்று விடலாமா யென்றுகூட நான் யோசித்ததுண்டு.

என்றாலும் தலைக்குமேல் வெள்ளம் ஜான ஓடினாலென்ன முழம் ஓடினாலென்ன என்ற வைராக்கியத்தால் உந்தப்பட்ட நான் அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு பிடிவாதம் காட்டினேன். இறுதியாக வர்ணாஸ்ரம கல்வித் திட்டம் குப்புறக் கவிழ்ந்ததல்லாமல், என்னையும் பதவி நாற்காலியிலிருந்து விரட்டியடித்தது.

பாருங்களேன்—அந்த சமயத்தில்தானா இந்த நேரு தி. மு. க. வினரை வசைமொழியால் அர்ச்சிக்க வேண்டும்! அதற்கான எதிர்ப்புப் எனது வர்ணாஸ்ரம கல்வித்திட்ட எதிர்ப்போடுதுணை கொண்டது. அதுபோலவே டால்மியாபுர பெயர் மாற்றக் கிளர்ச்சியும் இவ்விரு போராட்டங்களுடன் சேர்ந்து மும்முனைப் போராட்டம் என்ற கிளர்ச்சியால் எனது பதவியின் நீடிப்பைத் துண்டித்து விட்டனர்.

அந்தத் தோல்வியிலிருந்து எனக்கு தொடர்ந்து மேலும் பல தோல்விகள்தான் கிடைக்கிறதேயன்றி வெற்றிப்பாதை புலப்படவே யில்லை. அணுகுண்டு அழிப்பு குறித்து அறிக்கை விட்டேன். 'அரோகரா'வாக முடிந்தது! அமெரிக்க உதவி வேண்டாமென்றேன். இது பொறுப்பிலிருப்பவர்கள் பேசக்கூடிய பேச்சல்ல என்று ஜவஹர்லால்ஜியே கண்டித்து விட்டார்! க்ஷயரோக இருமல் தடுப்பு ஊசி பிரச்னையை பற்றி கிளறினேன். சென்னை சர்க்கார் என் வாதத்தை தவிடு பொடியாக்குகின்றனர்!

இந்த வேலையே நமக்கு வேண்டாம். எம்பெருமானின் கல்யாண குணங்களையாவது பஜிக்கலாம் என்றால் அங்கு இந்த கம்யூனிஸ்டுகள்வேறு ஜால்ரா தட்டபேரம் பேசுகின்றனர்!

என்ன செய்வது எல்லாம் கர்ம பலன். எது எவ்வாறாயினும் எனது பதவி காலத்தில் வீண் தொல்லைகளுக்கு ஆளான தி. மு. கழக வீரர்களுக்கு ஜூலை 15-ம் நாள் நிகழ்ச்சியையொட்டி எனது நமஸ்காரத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

முன்னாள் முதலமைச்சர்

சென்னை

•

கற்பனை—நக்கீரன்

விதவைத் திருமணம்

•

திருவெண்காடு ஆண்டித்தோப்பில் 11—7—55 திங்கள் காலை 10 மணிக்கு மணமகள் இல்லத்தில் தி. மு. க. துணைச்செயலாளர் எம். குசலவன் அவர்கள் தலைமையில் தோழர் பிச்சமுத்துவுக்கும் தோழியர் ஞானத்திற்கும் திருமணம் நடந்தது. அவ்வமயம் விதவைத் திருமணம் ஏன் என்பது பற்றியும் நாடார் சமூகத்தில் திருமணம் நடத்த முன்வந்ததை பற்றியும் மற்ற சமூகத்தினரும் விதவையின் கண்ணீரை போக்க முன்வர வேண்டும் என்றும், தோழர்கள் சம்பத், எஸ். சண்முகம் ஆகியோர் விளக்கி பேசினார்கள் மற்றும் பலர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

சுவைத்துப்பாரீர் தொடர்ச்சி

காணவேண்டும். அது இன்னும் எரிந்து வழிந்துகொண்டேயுள்ளதாம்.

இப்படிப்பட்ட எட்னா மலை ஸிஸிலித் தீவில் கட்டானியா என்ற நகருக்குப் பக்கமுள்ளது,

இதைப்போன்ற மற்றொரு எரிமலை இத்தாலியிலேயே புகழ் பெற்ற நேப்பிள்ஸ் நகருக்கு அருகாமையிலுள்ளது. அதன் பெயர் **விசுவியஸ்** என்பதாகும்.

இத்தாலி தேசத்தில் **பாம்பெய்** என்னும் எழில்மிகு புராதன நாகரீக நகரை **கி. பி. 79-ல்** அழித்தொழித்து மூடிக் கொண்டதும் அவ்விசுவியஸ் என்னும் எரிமலை வெடிப்பேதான்.

அங்ஙனம் புதையுண்டு பூமிக்கடியில் மறைந்த பாம்பெய் நகரத்தை 1755-ல் இருந்துதான் தோண்டிப் பார்க்க முற்பட்டு அதன் சீர்மிகு எழிலையும், சிறந்த நாகரீகத்தையுங் கண்டு வியக்க முடிந்தது.

பாம்பெய் நகரம் எரிமலையால் பாழடைந்ததையும். பின்னர் தோன்றி எடுத்த வரலாற்று விரிவையும் அறிய விழைவோர் **தி லாஸ்ட் டேஸ் ஆஃப் பாம்பெய்** என்ற நூலைச் சந்திப்பாராக.

ஜப்பான் தேசத்திலுள்ள **ஃபுஜியாமா** என்ற எரிமலையின் அழிவுச் சக்தியும் கூறுந் தரத்தன்று.

இத்தகு இயற்கையின் அழிவுச் செயலை எங்ஙனம் யாரால் வெல்லுதல் கூடும்?

•

வேலனுக்கு வரையும் மடல்

அன்புள்ள,

நண்பர் வேலனுக்கு, வணக்கம். நிற்க தங்களின் அஞ்சல்கண்டு மகிழ்ச்சியுற்றேன். அந்த அஞ்சல் என்னிடம் சொன்ன உண்மைகள் பல. மேலும் தாங்கள் கிராமத்தின் நிலையினையும் விவசாயிகளின் அவதிபற்றியும், ஆட்சிபீடத்தில் அமர்ந்து ஆதிக்கம் புரிபவர் கொண்டு வந்திருக்கும் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், கடன் நிவாரணச் சட்டம் என்னும் முதலாளிவர்க்கத்திற்கு திரை போடுவதுபோல் செய்யும் செப்படி வித்தையைப் பற்றியும் நல்லமுறையில் தாங்கள் எழுதியிருந்தீர்கள். பஞ்சாலைப் பகுதியிலே உழன்று கொண்டு இருக்கும் என்போன்றோர்க்கு தங்களின் கடித மூலமாக பல விஷயங்களை தெரிய நேர்ந்தது குறித்து உள்ளபடியே நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நாட்டிற்கு முதுகெலும்பு போன்றவர்கள் விவசாயிகள் என்பது மட்டுமல்ல, விவயாயிகளின் மூக்கியத்துவத்தைப் பற்றியும், அவர்கள் உழைப்பைப் பற்றியும் இந்த நாட்டின் உயிர் நாடியே அவன் கையில்தான் என்பது குறித்தும்—வள்ளுவனார் உள்ளிட புரட்சிக் கவி பாரதிதாசனார் வரை மிகத்தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளனர். விவசாயி அருமை பெருமைகளையும், அவர்களின் அவசியத்தைப் பற்றியும் ஒன்றும் சொல்லுதற்கு இயலாது, ஏன் எனில் அந்த அளவு உலகில் உள்ள மனித சமுதாயத்தைக் காக்கக்கூடிய அத்துணை மாபெரும் வன்மை கொண்டவர்கள் விவசாயிகள். அத்தகைய விவசாயிகளைப்பற்றி நான் கூறுவது என்றால் அவ்வளவு எளிய காரியமல்ல. உலகில் எத்தொழிலினைக் காட்டிலும் விவசாயமே தலைசிறந்த தொழிலாகவும் அவசியமிக்க தொழிலாகவும்விளங்குகிறது. ஆனால் அத்தகைய விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளின் நிலைஎன்ன? அவர்கள் இந்த நாட்டில் எந்த அளவு சுகமாக வாழ்கின்றனர் என்பதை பார்ப்போமேயானால்—நம் நெஞ்சம் பதைக்கும். ஏன் என்றால் அந்த அளவிற்கு மிக மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டு இருப்பதோடு, அவர்களுடைய வாழ்வு நாளுக்கு நாள் நலிந்து கொண்டே வருகிறது.

நாம் கண்முன்னே காண்கிறோம். உலகில் உள்ள அத்துணை நாடுகளிலும் ஒரு வருடமல்ல பல வருடமாயினும் சரி பருவ மழை தவறுமாயின் அவர்களுடைய வாழ்வில் வாட்டத்தையோ ஏழ்மையையோ காண முடியாது, இந்த இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு வருடம் பருவ மழை தவறுமேயானாலுங் கூட சுகமாக வாழ முடியும் வறுமையின்றி, ஆனால் இந்த நிலை இந்தியத் துணைக்கண்ட முழுவதும் இல்லை—திராவிடத்தைத் தவிர, வடநாடு முழுவதிலும் ஐந்தாண்டு மழை இல்லா விட்டாலுங் கூட வளமாக செழிப்பாக, வறுமையின்றி வாழ முடியும். இந்த அளவிற்கு ஐந்தாண்டு திட்டங்கள் அவர்களுக்கு வகையையும். வழியையும், வகுத்துக் கொடுத்துள்ளது. ஆனால் திராவிடத்திலே பருவமழை தவறுமேயானால் காட்டிலேயும் மேட்டிலேயும் விளைந்து கிடக்கும் கற்றாழையையும். மூலையில் கிடக்கும் புளியங் கொட்டையையும் நாட்டின் தொழிலாளர்களின் மத்தியதரமக்களின் குறிப்பாக விவசாய மக்களின் உணவுப் பொருளாகக் காணலாம் மார்க்கட்டிலே.

நண்பா! ஏன் இந்த நிலை நமக்கு மட்டும் ஏற்பட்டது. உலகில் உள்ள மற்ற நாட்டு மக்களுக்கு இல்லாத இந்த வறுமை உலக மக்களுக்கு ஏற்படாத இந்த சீர்கெட்ட வாழ்வு, இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் ஏற்படாத இந்த பஞ்சத்தின் கொடுமை. ஏன் இந்த திராவிடத்தில் மட்டும் வெறிக் கோலத்தில் தாண்டவமாடுகிறது? ஏன் பட்டினிப் பட்டாளம் நாட்டிலே பவனி வருகிறது? ஏன் பட்டினிச் சாவு ஏற்படுகிறது? பசிக் கொடுமையால் வறுமையின் அகோர தாண்டவத்தால் ஆற்றிலேயும், குளத்திலேயும், புகை வண்டியின் சக்கரங்களிலேயும் விழுந்து ஏன் மடிகின்றனர்.

ஒரே நாடு, ஒரே மக்கள், ஒரே ஆட்சி என்று ஆசியஜோதி முதல் விருதை வீரர் காமராசர் உள்பட கூறப்படுகிறதே, ஏன் இந்த நாட்டில் குறிப்பாக திராவிடத்தில் பட்டினிப் பேய் தலைவிரித்தாடுகிறது. வறுமை ஆதிக்கஞ் செலுத்துகிறது. ஐந்தாண்டுத் திட்டத்திலே தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது. விவசாயிகள் கடன் தொல்லையால், வறுமையின் தாக்குதலால், வீட்டையும் மாட்டையும் விற்று வாழ வழியின்றி அநாதைகளாக மாவட்டத்திற்கு மாவட்டம் பிழைக்க வழி தேடிச் செல்கின்றனர். இதற்கெல்லாம் ஆள்பவரும் ஆளுங் கட்சியும் தக்க பதில் தரமுடியுமா?

முடியாது என்பதுமட்டுமல்ல, அவ்வப்போது ஒருவினோதமான 'பதில்' என்ற பெயரால் கேலி வார்த்தையை அள்ளிக்கொட்டிக் கொண்டு வருகின்றனர். இந்த வார்த்தைகளின் மூலமாக நாம் பிரச்னைகளைத் தீர்த்து விட்டோம் என அவர்கள் எண்ணுகின்றனர். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் தங்களுடைய முரண்பட்ட போக்கிற்கு இத்தகைய சப்பைக்கட்டுகள் கட்டி தங்களுடைய 'மேதா'விலாசத்தை காட்டிக் கொள்வது இயற்கைதான். ஆனால் 'முற்போக்கு வாதிகள் என்று கூறுவோர் இதைப்பற்றி சிந்திக்க ஏனோ தவறி விடுகின்றனர்.

நண்பா! நீ எழுதிய கடிதத்தில் பொதுவுடமை தோழர்கள் நடத்திய விவசாய சங்கத்தில் இருந்ததாகவும் அதற்காக பல பணியாற்றியதாகவும் அப்பொழுது நிகழ்ந்த சம்பவங்கள் சொல்லவும் இயலாத கொடுமை நிறைந்ததெனவும், அந்த நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் புரிந்த உதவிகளையும் அறியாமை எனும் இருளில் அடைபட்டு அவதியுற்று, பகுத்தறிவுப் பாசறையாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றுகிறேன் எனவும் அதற்கு வழி காட்டியாக தி. மு. க.வும் விவசாயிகளும் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்திய திரு என். வி. நடராசன் அவர்களின் பேச்சு அமைந்ததெனவும்; தாங்கள் விளக்கமாக குறிப்பிட்டிருந்தீர்கள். இந்தச் செய்தியைக் கேட்டு மற்றவர் மகிழ்வு அடைவதைக் காட்டிலும் பன்மடங்கு அகமகிழ்வு அடைகின்றவன் நானேயாகும். மேலும் எந்த ஒரு பிரச்னைகளையும் மேல் போக்காக, காணுகின்ற தன்மையுடையதுஅல்ல திராவிட முன்னேற்றக் கழகம். நாட்டிற்கு அவசியமும் அவசரமுமான எந்தப் பிரச்னையிலும் தவறியது கிடையாது தி. மு. கழகம். தன் நாட்டிற்கும், தன் தாய் மொழிக்கும், பண்பாடு கலாச்சார நாகரிகத்திற்கும். அரசியல் சமுதாய, பொருளாதார நிலைகளை நன்றாகச் சிந்தித்துப் பார்த்து, இந்நாட்டின் வறுமைநிலை ஒழியவும், வாழ்வு மலரவும், என்ன என்ன வழிமுறைகள் உண்டோ அந்தத் துறைகளில் எல்லாம் தலையிட்டு தன்னுடைய கடமைகளைச் செவ்வனே செய்து காட்டத் தவறாத தி. மு. கழகத்தில் தாங்கள் பங்கு கொண்டு பணியாற்றுவது குறித்து மற்றவரைக் காட்டிலும் பன்மடங்கு மகிழ்வு கொள்வதில் என்ன தவறு?

நண்பரே! நான் தாங்களிடம் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுஉடமை யாரைக் குறித்து தங்களைவிட அறிந்தவனல்ல நான். எனினும் என்னுடைய சிறு கருத்தைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். பொது உடமை என்ற தத்துவத்தினை நாம் காணுகின்றபொழுது. அந்தத் தத்துவத்திற்குள்ளான நிலை நாட்டிலே நடைமுறைக்கு வரவேண்டும் என்பதிலே அவர்களுக்கு உள்ள அக்கரையைவிட மிக நமக்குண்டு. 'சோசலிசம்' என்ற தத்துவம் வெறும் வார்த்தையளவில் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் தேசியத் தோழர்களிடம் சிக்கிக் கொண்டு எப்படி அவதிப் படுகிறதோ அப்படித்தான் பொதுவுடமை என்ற தத்துவமும்.

நாட்டின் மேல் அக்கரை இல்லாத, மொழியின்மேல் அக்கரையில்லாத சமுதாய சீர்கேட்டின் மேல் அக்கரை யில்லாத ஒரு சிலரிடம் சிக்கிக் கொண்டு ஆட்டி அலைக் கழிக்கப் படுகிறது—'சமதர்மம்' 'பொது உடைமை' என்றதத்துவங்கள். இது இன்று வார்த்தை அளவில்' அரசியல் மார்க்கட்டில் விலை பொருளாக ஆக்கிவிட்டனரே அன்றி உண்மையான எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு தன்நாடு, மொழி சிறப்புறவும், பண்பாடு நாகரிகக் கலாச்சாரம் சீர்திருத்தம்பெறவும், சமதர்ம—பொதுவுடமை நாட்டிலே நிலவவும் அக்கரை கொண்டு உழைப்பது திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர, வேறு எந்த அரசியல் இயக்கமும் பாடுபடுவதாக துணிந்து கூற இயலாது. திராவிட முன்னேற்றக் கழகம் எப்பிரச்னையைக் குறிப்பிடுகிறது? அப்பிரச்னையின் அடிப்படை என்ன? திராவிட முன்னேற்றக் கழகம் உண்மைக்கும், வரலாற்றிற்கும் புறம்பான கருத்துக்கள் என்ன கூறுகிறது? என்பதை தெளிவாக உணர்ந்து கொள்கையிலே இது தவறுடையது என எவரும் சுட்டிக் காட்ட முன்வரவில்லை. அதற்கு மாறாக வசை மொழிகளையும் இல்லாத செய்தியை புனைந்துக் கூறுவதில்தான் இந்த நாட்டு தேசியத் தலைவர்கள் முதல் மக்களின் முற்போக்கு ஏடு எனக் கூறிக் கொண்டு தங்களுடைய கீழ்த்தரமான புத்தியைக் காட்டி இருக்கின்றனர்.

நண்பா! உன்னுடைய கடிதத்தில விவசாயத் தொழிற் சங்கம் நடத்தும் தோழர்கள் பேரம் பேசி பழிவாங்குவது குறித்தும் 'முற்போக்குவாதிகள்' எனக்கூறிக் கொள்வோர்கள் நடத்தும் தேனீர் விடுதிகளில் தாழ்த்தப்பட்டவர்கட்கு தனி இடம் தான் எனறும், இந்த நிலையில் எங்களுக்கென (விவசாயிகள்) ஒரு பிரிவு ஏற்படுத்த திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற் சங்கங்கள் நிறுவவில்லை எனவும் குறையுடன் எழுதியிருந்தீர்.

மறைமுகமாக பழிவாங்கும் தொழிற் சங்க வாதிகளின் நன் நடத்தை என்ன? அதன் வேலை திட்டங்கள், அது செயல்பட வேண்டிய முறை நாட்டிற்கும் - சமுதாய - அரசியலுக்கும் தொழிற் சங்கங்கள் எந்த முறையில் பணியாற்ற வேண்டும், என்பன எல்லாம் தெளிவாக இன்றைய தினம், தொழிலாளர்கள் உணர்ந்துவரும் இத் தருணத்தில், என்றாவது ஒரு நாள் உண்மை வெளிவராமல் போகாது. அத்தகைய சுய நலப் போராட்டங்களுக்கும், தூண்டி விட்டு பழிவாங்கும் துரோகிகளுக்கும், அவ்வப்பொழுது விழிப்புணர்ச்சிபெற்ற தொழிலாளர்சமுதாயம்பாடம் கற்பிப்பரென்பது என் கருத்து. ஊரையே தன் கண்வெட்டால் இழுக்கும் கட்டழகி, தன் ஈனத் தொழிலை மறைக்க "படி தாண்டா பத்தினி வேஷம்" போடுவது போல, தன் பொல்லாச் சிறகுகளை விரித்து ஆடும் வான்கோழி தானும் மயிலென நினைத்துக் கொள்வது போல தீண்டாமையைக் கருதுகின்ற சிலரும், முற்போக்கு கருத்துக்களுக்கு சப்பைக் கட்டு கட்டுகின்றவர்களும், பழைய கள்ளை புதிய மொந்தையில் ஊற்றுவது மட்டுமல்லாமல் அந்தச் செயலுக்கு 'முற்போக்கு' எனவும் கூறுகின்றனர். எனவேதான் அவர்கள் நடத்துகின்ற தேனீர் விடுதியில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு தனியிடம் ஒதுக்குவது

பேராசிரியர்பேசுகிறார்

ஒன்றுபட்ட உள்ள உணர்வே சமுதாய மறுமலர்ச்சி!

12

தமிழ் நாட்டில் ஒற்றுமை குறைவு என்றும் ஒற்றுமை இல்லாத ஒரு சீர்கேடே தமிழகத்தை பெரிதும்இழிநிலைக்கு உட்படுத்துகிறது என்றும் எல்லோரும் கூறுகின்றனர். வடிவாலும், நிறத்தாலும், தொழிலாலும் பழக்க வழக்கத்தாலும் மட்டும் ஒரு தன்மையினராகஇருந்தால்போதாது.அப்படி இருக்கும் மக்கள் கூட்டத்தை ஒன்றுபட்ட சமுதாயத்தின் அங்கங்கள் என்றும் கூறமுடியாது. வங்காளியும் மராத்தியரும் தமிழரும்கூட வடிவாலும் பழக்க வழக்கத்தாலும் ஒன்றுபட்டவர்கள்தான். இருந்தும் இம்மூவரும் ஒன்றுபட்ட சமுதாயத்தினராகக் கருத இயலவே இல்லை. ஏன் இந்த குறைபாடு? வங்காளியும் மராத்தியரும் தமிழரும் ஒரே இனத்தினர் என்று தங்களை ஏன் கருதுவதில்லை? இதுபோன்ற வினாக்கள் எழும்போது தான் உண்மையான சமுதாயத்தை மக்களினமும் கூட உணர இயலகிறது. உள்ளத்து உணர்வால்தான் மக்கள் ஒன்றுபட முடியும். அண்மையில் சமுதாயம் மலர்ந்ததுகூட இந்த ஒன்றுபட்ட உள்ள உணர்வால்தான் என்றுகூட உறுதியாகச் சொல்லலாம். 'உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்' என்பது வள்ளுவம். இருவர் நட்புக்கு மட்டுமின்றி நாட்டு நலனுக்கும் மக்களின் ஒன்றுபட்ட சமுதாய உணர்ச்சிக்கும் பொருந்துவது தான் அதன் உண்மைத்திறன்.

தமிழ் மக்களில் சிலர் ஒன்றை மிகப் போற்றுவாராயின், உடனே வேறுசிலர் அதனையே மிக மிகத் தூற்றத் தலைப்படுகின்றனர். இதனினும் உயர்ந்தது உலகில் இல்லை எனச் சிலர் தலைமேற்கொண்டு புகழ்வதையே மற்றவர்கள் கேவலமான செயலினும் கேவலமானது என்று தூற்றுகிறார்கள், குற்றமற்றது என்று சிலர் பாராட்டுவதையே வேறு சிலர் குற்றம் உணர்தற்காகவே ஆராய்ந்து குற்றமுடைத்தானது என்று பழிசுமத்துகின்றனர், சமுதாயத்திலும், அரசியலிலும் பொருளாதாரத்துறையிலும் ஓர் எல்லையில் நின்று தூற்றுவோரும் மற்றோர் எல்லையில் நின்று போற்றுவோருமாகவே தமிழகத்தில் பகுத்தறிவுக் கருத்துக்களும் கொள்கைகளும் பரவ இயலாமற் போகின்றது. தமிழ் நாட்டு மக்கள் கொள்கையைப் பற்றிக் கூட சிந்திப்பதில்லை. கொள்கையின் அடிப்படையாக வைத்து கொள்கை பேசும் மனிதனின் தராதரத்தை உணர்வதில்லை. மாறாக கொள்கை பேசும் மனிதனின் மீது கொண்டுள்ள விருப்பு வெறுப்பின் காரணமாகவே கொள்கையை ஆய்தற்கும் தலைப்படுகின்றனர். மாற்றான் என்பதற்காக எவ்வளவுதான் முன்னேற்றப் பாதையாக இருந்தாலும் ஏற்பதற்குப் பெரிதும் அஞ்சும் கூட்டம் தமிழகத்திலே உண்டு.

ஒரு சாரார் கடவுள் பற்றித் தமிழ் மக்கள் ஆபாசமான எண்ணத்தைக் கண்டிக்கிறார்கள் என்பதற்காகவே வேற்று சாரார்கள் இறைவழிப் பிரசங்கங்கள் செய்யத் தலைப்படுகின்றனர். எதிர்ப்பு மனப்பான்மையை வளர்க்க இப்படிப்பட்ட இழி மனப்பான்மையை வளர்க்க இப்படிப்பட்ட இழி குணத்தினர் கடவுளைப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளவும் இயல்கிறது. பகுத்தறிவு மேடைகளுக்குத் தீ வைக்கவும், தடிகொண்டு தாக்கவும் இறைவன் பெரிதும் பயன்படுத்தப்படுவது கண்டு தான் மிகவும் வருந்தவேண்டியுள்ளது.

தமிழ் மக்கள் இவ்வளவு காலமாக அறிவிலிகளாகவும் ஏமாளிகளாகவும் வாழ்ந்ததால் ஏற்பட்ட பேராபத்துதான் இது என்று துணிந்து கூறுவேன். அறிவை அடகு வைத்து ஏமாளிக் கூட்டமாக யார் எதைச் சொன்னாலும் நம்பிய காரணத்தால்தான் சிந்திக்கும் திறமை அழிந்து எதிர்ப்பு மனப்போக்கும் முரட்டுத்தனமான எண்ணமும் தமிழகத்தினருக்கு வளர்ந்தது. சிந்திக்கும் மனப்பான்மை குறைவான பகுதிகளில் பகுத்தறிவு எண்ணம் பரவுவது மிகவும் கடினமானதுதான் அப்படி ஏதும் சீர்திருத்தப் பிரசாரங்கள் நடைபெற்றால் கல்லடியும் சொல்லடியும் கிட்டித்தான் தீரும். ஆனால் இதற்கோர் நல்ல முடிவும் கிட்டும். ஏமாளிகளாகவும் அறிவிலிகளாகவும் வாழும் கூட்டம் வீசும் கல் வீச்சலே பெரிது, இதேகூட்டம் எதிர்காலத்தில் கற்றுணரும் திறமையைப் பெற்றுவிட்டால் கரம் கூப்பித் தொழுது எதிர்த்துக் குழப்பம் செய்யாது உள்ளதைப் பகுத்துணரவும் முன்வரும்.

படிக்காத மூடர்களின் உள்ளத்தைக் கவருவதல்ல பெரிது, படித்த மேதைகளும் உணரக் கூறும் கொள்கைகள்தான் புனிதமானது என்று துணிந்து கூறலாம். படிக்காத பாமரர்களின் உள்ளத்தை உணர்ந்த கொண்டால் போதும். அவர்கள் எண்ணப்படியே பேசித் தலையசைத்தால் ஆயிரக் கணக்கில் புகழ் மாலையை பெற்று விடலாம். ஆனால் படித்த மக்களிடம் பேசும் போதுதான் காரண காரிய முணர்த்தி விளக்க வேண்டிய அவசியமேற்படுகிறது. தற்காலத்தில் கல்லூரியிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் மறுமலர்ச்சி எண்ணங்கள் பரவியுள்ளது கூட சிந்திக்கும் திறமை தமிழகத்தில் படித்த மக்களிடையே மலர்ந்ததால்தான். சிந்திக்காமல் கூட நாம் படித்து விடலாம். அப்படிப் படித்தால் படிப்புக் காலமும் சக்தியும் வீணாகுவதன்றி வேறு ஏதும் நேர்ந்து விடாது. ஆனால் படிக்காமல் சிந்திப்பதுதான் பேராபத்து. சிந்தியாமல் படித்தால் கூடக் கவலையில்லை. படிக்காமல்தான் சிந்திக்கக் கூடாது என்று பலருக்கும் உணர்த்த வேண்டியுள்ளது. தமிழகத்தில் பெரும்பாலான பெரிய மனிதர்கள் படிக்காமலே சிந்திக்கக்கூடியவர்களாகவே அமைந்து விட்டார்கள். எனவேதான் அவர்கள் பெரும் பதவிகளை ஏற்கும்போது பேராபத்துக்களை இழைத்து விடுகின்றனர்.

தமிழகத்தில் கடவுள் நெறியைக் கூட சிந்திக் காமலும் இருக்கும்படியான மக்களிடையே பயத்தை உண்டாக்கியே பரப்பினார்கள். இப்படிப்பட்ட வழியில் பரப்பப்படும் கொள்கைகள் நிலையாக நீண்ட நாட்களுக்கு நிலைப்பதில்லை என்பதற்கு செங்கிஸ்கானும் ஹிட்லருமே போதுமான சான்றுகள், செங்கிஸ்கானும் ஹிட்லரும் பயத்தை விளைவிப்பதாலேயே அரசு ஆண்ட வகையினர். கால வெள்ளத்தில் இவர்கள் அழியும் காலத்தில் உலக மக்களில் யாரும் ஆதரவு பேச்சு இல்லாமலே அழிந்தார்கள். பயத்தாலும் பக்தி பரவசத்தால் உலகை மறப்பதிலனும் சமயத்தைத் தமிழகத்தில் பரப்பியதால் தான் பகுத்தறிவுக் கொள்கைகள் நாடெங்கும் பரவுவதற்கும் இயல்கிறது,

மக்கள் எந்த விதமான குறைபாடும் இல்லாமல் வாழும் போது சமய நெறிகளைப் பற்றி வெகு அழகாகப் பேசுவார்கள். அவர்கள் பேச்சுக்களைக் கேட்கவும் கூட்டம் கூடுவதுண்டு. ஆனால் குறைபாடும் தோன்றும் போது இயல்பாகவே சமயத்தை மறந்து விடுவார்கள் இறைவனையோ மதத்தையோ பற்றி எந்தவிதமான கவலையும் கொள்வதில்லை.

சமயத்தினால் ஒழுங்கு முறையை வளர்க்க இயலுமேயாயின் அப்படிப்பட்ட சமயக் கொள்கைகளை பகுத்தறிவாளர்கள் யாருமே எதிர்ப்பதில்லை. சமண மதமும் பௌத்த மதமும் கொண்டுள்ள உலக ஒழுங்கு முறையை ஆதரித்து சீர்திருத்தவாதிகள் பொது மேடைகளில் முழங்குவதே இதற்குப் போதுமான சான்று. ஆனால் இக்காலத்திலோ சமயத்தில் துணை இல்லாமலே உலகஒழுங்குமுறைக்கான கொள்கைகள் வளரவும் வளர்க்கவும் இயல்கிறது. எனவே உலகை நம்பி உலகில் வாழும் வகையை உணரக்கூடிய கூட்டமாக மக்களுலகு திரும்ப வேண்டும். அன்பையும் அருளையும் அடக்கத்தையும் உலக நெறியாக உணர்த்தும் காலமும் தமிழகத்தில் மீளிர வேண்டும்.

அந்நாள் வந்தால்தான் தமிழகம் தமிழகமாகவும்கலாச்சாரம்கலாச்சாரமாகவும் திகழமுடியும், அந்த நாளுக்கான விடிவெள்ளி தோன்றுவது மறுமலர்ச்சிக்காரர்களின் தீராத உழைப்பையும் மக்களின் நேர்மையான மனப் போக்கையும்தான் பொறுத்துள்ளது. அந்த விடிவெள்ளி விரைவில் தோன்றுமா?— (தொடரும்)

—வி. சுந்தரராசு

நான்குனேரிவட்டார ஆதித்திராவிட சங்கம் பம்பாய்

30—6—55-ல் பம்பாய் தாராவியில் நான்குனேரி வட்டார ஆதித்திராவிட சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழா சங்கத் தலைவர் உயர்திரு மாசானம் அவர்கள் தலைமையில் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. துணைச்செயலாளர் எம். பி. காசி அவர்களால் விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது, திரு எம். எ. சண்முகம் அவர்கள் வரவேற்புரை யாற்றிய பின் பொதுச்செயலாளர் வி. பி. நடராசனால் 2-வது ஆண்டு வரவு செலவு அறிக்கை வாசிக்கப்பட்டு சங்கத்தின் இருப்பு ரூ. 328—15—3. நன்கொடை மூலம் ரூ. 236; ஆக இருப்புப் பணம் 564—15—3. இதில் சங்க அலுவலகம் வாங்கியது செலவு உள்பட ரூ. 546 மீதி 18—15—3.

இரண்டாவது ஆண்டில் பணியாற்றிய நிர்வாகிகளுக்கு திரு. எம். எ. சண்முகம் மலர் மாலைகள் அணிவித்தார். நன்றி தெரிவிக்கும் முறையில் பழைய நிர்வாகிகள் சொற்பொழிவாற்றியபின் 3-வது ஆண்டுக்கு நிர்வாகிகளாக எம். ஜெ ராஜமணி, வி' எஸ் சற்குணம், எம். கே. சங்கரன், என். எஸ். கணேசன், முறையே தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், துணைசெயலாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். வி. எஸ். சற்குணம் அவர்களால் புதிய நிர்வாகிகள் சார்பில் நன்றி தெரிவிக்கப் பட்டபின் தேனீர் விருந்துடன் இனிது முடிந்தது.

குறித்து நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் அவசியமில்லை. மேலும் தாங்கள் குறிப்பிட்டது போல் விவசாய தொழிற் கழகத் துறையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபடாதது குறித்து வருத்தப் பட்டு எழுதி யிருந்தீர். இந்த இடத்தில்தான் நான் உங்களுக்கு பேரூர் பொதுக்குழுவின் தீர்மானத்தை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

"தி. மு. க. தோழர்கள் ஆங்காங்கே தொழிலாளர் மத்தியில் தீவிரமாக பணியாற்ற வேண்டுமெனவும் அந்தப் பகுதியில் வளர்ந்து வரும் சூழ் நிலைகளை தலைமை நிலையத்திற்கு உடனடியாக தெரிவிக்க வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பது தாங்கள் அறிந்ததே. எனவே இந்தந்த பகுதியில் தொழிலாளர் விவசாயிகள் இடையில் நடக்கும் நிலைமைகளையும், விவசாய சங்கம் ஏற்படுத்தி நடத்துவதற்கான சூழ்நிலைகள் உருவாகி இருந்தால் அதைத் தலைமை நிலையத்திற்கும் பொதுச் செயலாளருக்கும் தெரிவிக்க வேண்டியது நமது கடமையாகும். எனவே தாங்கள் அந்த முறையில் ஈடுபடுவீர்களானால், தாங்கள் எதிர்பார்த்த திராவிட விவசாயிகள் சங்கம் விரைவில்ஏற்படவும், தீவிரமாக செயல் படவும் வழி பிறக்கும். அது எப்படியிருப்பினும் அண்மையில் திருச்சியில் கூடும் திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடானது தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும், அரசியல் துறையிலும் பல சிறந்த முடிவுகளைச் செய்ய இருக்கிறது. திராவிடத்தின் வரலாற்றிலேயே புதியதொரு அத்தியாயம் துவங்க இருக்கும் அந்நாளில் சந்திப்போம். இருவரும் கருத்துக்களை பரிமாறிக் கொள்வோம்.

வணக்கம், அன்பன்

கோவை. இரா. சுந்தரம்

ஓர் விளக்கம்

—ஆ, மீ. அலிசேக்மன்சூர்—

அகில உலக சமாதானம் பேசும் பண்டித நேரு சர்க்காரால், தென்னிந்தியா எவ்வளவு தூரத்துக்கு புறக்கணிக்கப் படுகின்றது என்பதற்கு நாம் பல சான்றுகள் காட்டிப் பேசியிருக்கிறோம்; இந்த புறக்கணிப்புக் கொள்கைக்கு நல்ல முறையிலே உருவம் தருவதற்காக நாம் 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்' நடத்திக் காட்டினோம், நமது முயற்சி வீண்போகவில்லை; நமது உழைப்புக்கு நிச்சயமாக பலன் கிடைத்துதானிருக்கிறது.

எதிர் முகாமிலுள்ளவர்களெல்லாம் தென்னாடு புறக்கணிக்கப்படுவதை நல்ல முறையில் உணர்ந்துவிட்டனர்; ஏக இந்தியாவின் ஐக்கியத்தைப் பேசியவர்களெல்லாம் இப்போது உண்மையை உணரத் தலைப்பட்டுவிட்டனர். நமது குரல் சட்டசபையிலே ஒலிக்கின்றது, மத்திய மன்றத்திலே முழக்கம் கேட்கின்றோம். நகர சபைகள் தீர்மானம் நிறைவேற்றக் காண்கிறோம்.

ஐந்தாண்டுத் திட்டத்திலே தென்னாட்டுக்கு உரிய பங்கு தேவை என்பதை தேசிய முகாமிலுள்ளவர்கள்கூட சொல்லாமல் சொல்கின்றார்கள். பதவியிலே ஒட்டிக் கொண்டிருக்கும் சிலபல 'கனம்கள்' கூட, இப்போது திருவாயை திறக்க ஆரம்பித்துள்ளார்கள். இது விஷயத்திலே என்ன பேசினோம், இப்போது என்ன பேசுகின்றோம் என்ற சிந்தனை கொஞ்சம்கூட இல்லாமல், தடம் புரளும் ஆத்மாக்களும் இல்லாமலில்லை. அமைச்சர் சுப்ரமண்யம் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு! தென்னாடு புறக்கணிக்கப்பட்டால் ஆபத்தான கொந்தளிப்பு ஏற்படும் என்று எந்த அமைச்சர் சுப்ரமண்யம் பேசினாரோ அதே கனம்தான், சமீபத்திலே அதற்கு நேர்மாற்றமாக. வடநாடாவது தென்னாடாவது என்ற முகாரியை பாட ஆரம்பித்துள்ளார். அரசியல் உலகிலே இப்படியும் சில ரகங்கள்!

என்ற போதிலும் நமது கருத்துக்கள் எதிர்முகாமிலே வேலை செய்யத் தொடங்கி விட்டது என்ற உண்மை இப்போது நமக்குத் தெரியவருகிறது. இல்லாவிட்டால் குற்றாலத்திலே கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்திலே அந்த தீர்மானத்தைநிறைவேற்றியிருப்பார்களா? எந்தத் தீர்மானம்! நாம் என்னென்ன கருத்துக்களை மக்கள்மத்தியிலே வலியுறுத்தி வருகின்றோமோ, அந்த கருத்துக்களை உள்ளடக்கிய தீர்மானந்தான் அது!

"பெரிய தொழிற்சாலைகள் சிலவற்றை தமிழ் நாட்டில் நிறுவ வேண்டுமாம்!' தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானம் இது! மத்திய சர்க்காரின் கால்களைப் பிடித்துக் கெஞ்சும் தோரணையில் இருக்கிறது தீர்மானம். தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் சென்னை மந்திரி 'கனம்' பக்தவத்சலம் அவர்கள்! ஆதரித்தவர் 'மத்திய கனம்' பொருந்திய மத்திய அமைச்சர் டி, டி. கிருஷ்ணமாச்சாரியார்தான்!

தீர்மானம் எதைக் குறிப்பாக சுட்டிக் காட்டுகிறது! இந்த தீர்மானத்தை இப்போது நிறைவேற்ற வேண்டியதன் அவசியம்! அதிலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு ஏன் இந்த அக்கரை? அத்தனை கேள்விகளுக்கும் விடைஎன்ன கிடைக்கிறது! தொழில் துறையில் தென்னாடு, பண்டித நேரு சர்க்காரால், புறக்கணிக்கப் படுகிறது என்ற உண்மையை தமிழ்நாடு காங்கிரஸ் உணர்ந்துவிட்டதின் அறிகுறிதானே, இந்த தீர்மானம்! தேசிய முகாமிலுள்ளவர்களால், இதனை மறுக்கத்தான் முடியுமா? இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், தீர்மானத்தை நிறைவேற்றி ஆமோதித்தவர்கள் பெரிய மனிதர்களின் பட்டியலிலே இடம் பெறக் கூடியவர்கள்! இரண்டு பேரும் 'கனம்கள்'!

தீர்மானத்தோடு நின்றுவிடவில்லை. தீர்மானத்தை ஒட்டி, 'மத்திய கனம்' டி, டி. கே. அவர்கள் கொஞ்சம் விளக்கமும் கொடுத்து, தனது அரசியல் புத்திக்கு 'குளோசப்' கொடுத்திருக்கிறார். 'இப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறோமே இதை வைத்துக் கொண்டு, இந்த தி. மு. க. தோழர்கள் கும்மாளம்அடிப்பார்களே'' என்று பயந்து தானோ என்னவோ, தேவையற்ற விளக்கத்தை கக்கி யிருக்கிறார்!

'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாடு அலட்சியப் படுத்தப்படுவதாக, ஒரு கருத்து இங்கு நிலவுகிறது. இது ஒரு தவருன கருத்தாகும்'

டி. டி. கே.யின் வாசகமிது! வேடிக்கையைப் பாருங்கள்; தென்னாட்டின் தேவையை, பூர்த்தி செய்யுமாறு வடநாட்டு சர்க்காரை வற்புறுத்தும் தீர்மானத்தை அவர்தான் ஆதரித்திருக்கின்ருர்! பிறகு அவர்தான் இப்படியும் பேசுகிருர்; தென்னாடு அலட்சியப்படுத்தப் படுவதாகக் கூறப்படும் கருத்து, டி. டி. கே.யின் அகராதிப்படி தவருன கருத்தாக இருந்தால் 'அந்தத் தீர்மானமே' தேவையில்லை; இப்படிப்பட்டதொரு தீர்மானத்தைக் கொண்டு வந்ததிலிருந்து தென்னாட்டை வடநாடு புறக்கணிக்கின்றது என்ற கருத்து, தவருன கருத்தல்ல, சரியான கருத்துதான் என்றுதானே பொருள் படுகிறது!

டி. டி. கே. அவர்களுக்கு ஏற்பட்ட குழப்பம் அவரை முன்னுக்குப்பின் சம்பந்தமில்லாமல் பேச வைக்கின்றது; தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலே இத்தகையதொரு தீர்மானம் வராமலிருந்து டி. டி. கே. இவ்வாறு பேசியிருந்தாலாவது அறிவுக்குச் சிறிது பொருத்தமாக இருந்திருக்கும். அப்படியில்லாமல், தென்னாட்டையும் வடநாடு கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று பொருள்பட விருக்கும் தீர்மானத்தின் மீது, மந்திரியார் விசித்திரமாகப் பேசினுல் அதற்கு என்னதான் பொருள்? வடநாடு — தென்னாடு கொள்கையிலே டி. டி. கே அவர்களுக்கு நம்பிக்கையில்லையென்ருல் அந்த தீர்மானத்தை ஆதரிக்கும் பொறுப்பிலிருந்து அவர் விலகி யிருக்கலாம்; அதையும் அவர் செய்யவில்லை என்ருலும் முரண்படப் பேசுகின்ருர்;

முரண்படப் பேசிப் பேசி பழக்கப்பட்டவராயிற்றே அவர்! தன்னுடைய பெயரிலுள்ள ஆச்சாரி என்ற சாதிச் சொல்லைத் தான் இனி எடுத்துவிடப் போவதாகவும், தன்னை இனிமேல் டி. டி. கிருஷ்ணன் என்று அழைத்தாலே போதுமானதென்றும், ஒரு காலத்தில் இவர் கூறியதை நாம் எப்படி மறக்க முடியும்! இதே டி. டி. கே. பின்னர் நான் வேடிக்கைக்காக அன்றோ அப்படிச் சொன்னேன், ஆச்சாரி என்ற அந்த அற்புதமான சொல்லை யார்தான் விடுவார்கள் நான் டி. டி. கிருஷ்ணனல்ல. கிருஷ்ணமாச்சாரியேதான்என்று தன்னை மறந்து சொன்னதுவும் நாம் மறந்துபோன சங்கதியல்ல. ஒருக்கால் அரசியல் என்பது மாஜி சோப்பு வியாபாரியும் இன்றைய மத்திய கனமுமான டி. டி. கே. அவர்களுக்கு ஒரு விளையாட்டாகத் தெரிகிறது போலும். ஆனுல், அதுமக்களின் வாழ்வுப் பிரச்னை என்பதை அவர் மறந்து விடுதல் கூடாது.

இதனை மறந்த காரணத்தால்தான் அவர் முன்னுக்குப்பின் முரணுகப் பேசுகின்ருர். தென்னாட்டில் பெரும் தொழிற்சாலைகள் இல்லையென்ருல் அதற்கான காரணங்களை நாம் கண்டறிய வேண்டுமாம்,

இங்கு நிலக்கரி இல்லையாம். நெடுந் தொலைவிலிருந்து நிலக்கரியைத் துவங்குவது சிக்கனமாக இருக்கமுடியாதாம்! இது முதல் காரணமாம்!

சபாஷ்!

இங்கு பெரிய முதலாளிகள் இல்லையாம், நிலச்சுவாந்தார்கள் உள்ளனராம். ஆனுல் பெருந் தொழிற்சாலைகள் துவங்குவதற்கு தேவையான மூலதனத்தைத் திரட்டக் கூடியவர்கள் அதிகம் இங்கு கிடையாதாம்! இது இரண்டாவது காரணமாம்.

பலே பலே!

கிருஷ்ணமாச்சாரியார் காரணங்களை அடுக்கிக் காட்டியிருக்கிருர் குற்றாலத்திலே—தமிழ்நாடு காங்கிரஸ் முக்கியஸ்தர்களின் மத்தியிலே! அமைச்சர் அவர்களுக்கு ஒரு சிறு விளக்கம், சேலத்திலே இரும்பு கிடைக்கின்றது. நெய்வேலியிலே நிலக்கரி கிடைக்கிறது. இரும்புத் தொழிற்சாலை நிறுவுவதற்கான முயற்சியில் சர்க்கார் ஈடுபட்டுள்ளதா என்பதற்கு அவரால் என்ன விடை கூற முடியும் என்பதுதான் நமது கேள்வியாகும். நெய்வேலியிலே பழுப்பு நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் முயற்சியிலே சர்க்காருக்குத் துரிதமில்லை— காலதாமதம் ஏற்படுகிறது என்ற பரவலான உண்மையை சுதேசமித்திரன் வார இதழே சுட்டிக் காட்டி இடித்துரைக்கின்றது. சமீபத்தில் காங்கிரஸ் ஏடான சுதேசமித்திரன், இதுபற்றி எழுதிய தலையங்கத்தை டி. டி. கே யின் பார்வைக்கு சமர்ப்பிக்கின்றோம்.

இங்குள்ள நிலைமைகளை நாம் விளக்கினுல் டி. டி கே ஒப்புக்கொள்ளமாட்டார். சுதேசமித்திரன் 6—7—55 இதழ் டி. டி. கே. அவர்களுக்கு விளக்கம் தருகிறது, தமிழ்நாடு காங்கிரஸ் குழுவிலே டி. டி கே. சொன்ன காரணங்களை ஒப்புக்கொள்ள மறுக்கிறது இந்த ஏடு! நமது ஏடல்ல. காங்கிரஸ் ஏடு.

"அவர் (டி. டி. கே.) சொன்ன காரணங்களை முற்றிலும் நாம் ஏற்றுக் கொண்டுவிடவில்லை. அதிகமாக மூலதனம் போடக்கூடியவர்கள் தொழில் வளர்ச்சி விசேஷமாக உள்ள இடங்களிலேயே தோன்றுவர். பெருவாரியாக மூலதனம் போட்டால்தான் தொழில்கள் வரவர செழிப்புறும். தொழிலும் மூலதனமும் ஒன்றையொன்று தொடர்ந்து சுழல்வதாகும். **இரண்டும் இல்லாத இடத்தில் அந்த சுழற்சியை ஆரம்பித்து வைப்பது சர்க்கார் பொறுப்பே.''**

"நெய்வேலியில் பழுப்புச் சுரங்கமும் சேலம் ஜில்லாவில் இரும்புக் கனியும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன இரண்டையும் முழு அளவில் பயன்படுத்திக் கொள்வதில் அதிகாரிகள் அவசர உணர்ச்சியுடன் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.''

"'இங்கு (தென்னாட்டில்) கனிகளைக் கண்டுபிடித்தும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதில் போதிய சுறுசுறுப்பு காட்டப்படுவதாகத் தெரியவில்லை.''

சுதேசமித்திரன் ஏடுதான் இப்படியெல்லாம் தனது தலையங்கத்தில் தீட்டியிருக்கிறது. சரியானபடி டி. டி. கே, யின் பேச்சுக்கு சூடு கொடுத்துவிட்டது. சொல்லாமல் சொல்லி கொல்லாமல் கொன்றிருக்கிறது.

மூலதனம், பணக்காரர்கள், தொழில் வளமில்லை என்கிருர் டி. டி. கே. இவை இல்லாவிட்டால்தான் என்ன—அந்த சுழற்சியை சுவையில்லாத இடத்தில் ஆரம்பித்து வைக்க வேண்டிய பொறுப்பு சர்க்காரைச் சார்ந்தது என்று எழுதி டி. டி. கே. யின் தலையிலே ஓங்கி குட்டிவிட்டது சுதேசமித்திரன் ஏடு.

டி. டி. கே. தனது பேச்சின் வாயிலாக தன்னை யறியாமலேயே, மற்ருரு உண்மையை ஒப்புக் கொள்கிருர். அதாவது வடஇந்தியாவில்தான் முதலாளிகள்—பெரும் பணக்காரர்கள் உள்ளனர் என்பதைக் கூறி, வடநாடுதான் வளம் நிறைந்த பூமி என்பதையும் மறைமுகமாக ஒப்புக் கொள்கிருர்.

இந்த லட்சணத்திலே 'மாடல்சோஷலிஸம்' வேறு பேசிக் கொள்கிருர். வெட்கம் வெட்கம்! இவ்வளவு தூரத்துக்கு நியாயம்பேசக்கூடிய இந்த சூராதிசூரர் டி. டி. கே; வடநாட்டிலே அமைக்கப்படும் திட்டங்கள் அத்தனையுமே அங்குள்ள முதலாளிகளால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்; அப்படி அவர் சிந்தித்துப் பார்ப்பாரேயானல் தமக்கு ஏற்பட்டுள்ள இந்த கோளாறை அவராலேயே உணர்ந்து கொள்ள முடியும்.

நிலக்கரியும்—இரும்பும் அடுத்தடுத்து கிடைக்காத காரணத்தால்தான் இரும்புத் தொழிற்சாலையை தென்னாட்டில் ஏற்படுத்த முடியவில்லை என்ற டி. டி. கே. அவர்களின் ஓட்டை விழுந்த கருத்தை (உண்மையிலேயே நாம் ஒப்புக் கொள்ளாவிட்டாலும்) நாம் விவாதத்துக்காக ஒப்புக் கொண்டே பேசுவோம்; அப்படி ஒப்புக் கொள்ளும் போது வேறு சில பிரச்னைகள் அதனை ஒட்டி எழுகின்றனவே அதற்கு டி. டி. கே. என்ன பதில் சொல்வாரோ நாமறியோம்! அதாவது மற்ற கனிப்பொருள்கள்—மூலப் பொருள்கள் கிடைக்கக் கூடிய (தென்னாட்டைச் சேர்ந்த) இடங்களில் சர்க்கார் என்னதான் சாதித்து விட்டதென்பதை டி. டி. கே. விளக்கி காட்ட முடியுமா என்பதுதான் அந்தப் பிரச்னையாகும் அவருடைய கருத்துப் படி இங்கு இரும்பு இல்லை. நிலக்கரி கிடைக்கவில்லை; ஆகவே இரும்பாலை இல்லை. ஒப்புக் கொள்வோம் அவருக்காக!

அதே சேலம் மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 21000க்கு மாக்னசைட் கிடைக்கிறது. சர்க்கார் என்ன செய்தது!

மைசூர் வட்டாரத்தில் குரோமைட் கிடைக்கிறது சர்க்கார் செய்ததென்ன!

அணுகுண்டு செய்வதற்கு பயன்படக்கூடிய மோனசைட்—தோரியம் ஆகிய பொருட்கள்; உலகத்திலேயே அதிகமாக திருவாங்கூரிலே கிடைக்கிறது. சர்க்கார் சாதித்ததென்ன?

சேலம் மலையிலே 4 கோடி டன் அளவு பாக்ஸைட் கிடைக்கிறதாம்; சர்க்கார் என்ன தூங்குகிறதா!

இப்படி இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். சொல்வதற்கு ஏராளமிருக்கிறது. சர்க்காருக்கு சரியான புள்ளிவிவரங்களை நம்மால்காட்ட முடியும். டி. டி. கே. அவர்களால் என்ன பதில் சொல்ல முடியும், எப்போது பதில் சொல்லப் போகிருர்? எப்படி பதில் சொல்ல முடியும்!

தென்னிந்தியாவுக்கு இரும்பாலை கிடையாது என்று இதற்கு முன்னர் பலதடவை இதே 'மத்திய கனம்' கிருஷ்ணமாச்சாரி கூறியிருப்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இது விஷயத்தில் டி. டி. கே அவர்கள் அனுவசியமாக சம்பந்தமில்லாமல் பங்கெடுத்துக் கொள்வது சுத்த அபத்தமென்றும் இரும்பாலை பற்றிய விஷயம் திட்டக் கமிஷனை சார்ந்ததென்றும், சேலத்துப் பிரமுகர்கள் முன்பொருதடவை, டி. டி. கே. அவர்களுக்கு சூடான முறையில் உணர்த்தியிருப்பதை இந்த சந்தர்ப்பத்தில் நாம் அவருக்கு நினைவூட்டிக்கொள்கிருேம்.

இந்நிலையில் டெல்லி ஆதிக்கத்துக்கு கட்டுப்பட்ட இந்த 'கனம்கள்' ரேல் விழுந்த கிராமபோன் பிளேட்டுகளைப் போல இரைச்சல் போடுவது வெட்கக் கேடல்லவா யென்று கேட்கிருேம்.

●

கைத்தறித் துணியை ஆதரியுங்கள்

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிட நாட்டுக் கல்வி வரலாறு

21

ஆங்கிலக் கல்வி புகுந்த விதம்!

லார்ட் மெக்காலே தீர்ப்பின் படியாக ஆங்கில மொழிக் கல்வி சென்னையிலும் வற்புறுத்தப் பட்டது. இதற்கு முன்னர் டேனிஷ் பாதிரி ஸ்வார்ட்ஸ் அவர்களால் சில பள்ளிகளில் ஆங்கில மொழியில் கல்வி புகட்டப்பட்டு வந்ததும் இந்த ஆங்கில மொழிக் கல்வி போதனைக்கு சில சிற்றரசர்களும் ஜமீன்தார்களும் ஆதரவளித்ததும் முன்னர் கூறப்பட்டது நினைவிருக்கலாம். உயர் வகுப்பு மக்கள் ஆங்கில மொழியை பயின்று வந்ததோடு ஆங்கில மொழிக்கல்வியையும் வளர்த்து வந்தனர். ஆங்கிலேயரது ஆட்சி படிப்படியாக இந்நாட்டில் உறுதிப்பட்டு வருவதைக் கண்ட அவர்கள் ஆங்கில மொழியைக் கற்கவும் ஆங்கில அரசாட்சியில் உத்தியோகங்கள் வகிக்கவும் விரும்பினர். இம்மாதிரியான ஆவல் உயர்சாதி மக்களிடையே நிலவி வருவதை அறிந்த ஆங்கிலேயர்கள் தம் ஆங்கில மொழியை ஆட்சி மொழியாக ஏற்படுத்தியதிலும் ஆங்கில மொழிக் கல்வியை பள்ளிகளில் கட்டாயமாக்கியதிலும் வியப்பொன்றுமில்லை.

லார்ட் மெக்காலே அவர்கள் ஆங்கில மொழிக கல்வியையே ஆதரித்து கருத்துத் தெரிவித்ததற்கான காரணமும் அதன் வரலாறும் தெரிந்து கொள்ள வேண்டிய தொன்றாகும். அப்போது தான் நம் நாட்டில் ஆங்கில மொழிக் கல்வி ஏற்பட்டதினுடைய நன்மை தீமைகளையும் நன்கு அறிந்து கொள்ள முடியும்.

சென்னையைப் பொறுத்த வரையில் ஆங்கில மொழிக் கல்வி வேண்டுமா என்ற வாதப் பிரதிவாதங்கள் இருந்து வரவில்லை. திராவிட நாட்டுக் கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்திய கிருஸ்தவப் பாதிரிகள் நாட்டு மொழிகளிலேயே பள்ளிகளை நடத்தி வந்தனர். போர்ச்சுகீசியருக்கு போர்ச்சுகீசிய மொழியிலும் ஆங்கிலேயர்கட்கு ஆங்கில மொழியிலும் நாட்டு மக்களுக்கு அவர்களது தாய் மொழியிலும் கல்வி புகட்டி வந்தனர். இதையே கிழக்கிந்திய கம்பெனியாரும் ஆதரித்து வந்தனர். ஒரு சில சிற்றரசர்கள், ஜமீன்தார்கள் உயர்சாதியினர் ஆகியோர் ஆங்கில மொழியில் விருப்பம் காட்டியதினாலும் இவர்களது உதவியை எதிர்பார்த்த ஆங்கில அதிகாரிகள் அதற்கு ஊக்கம் தந்ததினாலும் உயர்வகுப்பு மக்களுக்கென்று நிறுவப்பட்ட சில பள்ளிகளில் ஆங்கில மொழிக் கல்வி கொடுக்கப்பட்டு வந்தது. இந்த சில பள்ளிகளைத் தவிர மற்ற எல்லாப் பள்ளிகளிலும் தாய் மொழியிலேயே கல்விப் பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தன. கம்பெனி ஆதரவு பெற்றுவந்த பள்ளிகளிலும் கூட தாய்மொழிக் கல்வியே நடைபெற்று வந்தன. முதன்முதல் சென்னை மக்களின் கல்வி நிலையை உயர்த்த விழைந்த சர் தாமஸ் மன்ரோ அவர்கள் கூட தாய்மொழியில் பள்ளிகளையே நடத்த திட்டம் வகுத்து அதன்படிச் செய்தார். ஆகவே ஆங்கில மொழியில் கல்வி புகட்டுவதா அல்லது உள்நாட்டு மொழிகளில் கல்வி புகட்டுவதா என்ற விருப்பத் தகாத நிலை திராவிடத்தில் நிலவி வரவில்லை அப்படிப்பட்ட எண்ணம் ஏற்படுவதற்கான சூழ்நிலையும் இருந்து வரவில்லை. திராவிடத்தின் உண்மை இப்படி இருக்கும்போது எப்படி ஆங்கில மொழிக் கல்விதான் இனி அரசாங்கத்தினரால் ஆதரிக்கப்பட வேண்டும் என்று திடீரென்று சென்னை சர்க்கார் கட்டளை யிடப்பட்டனர்! இதன் உள் சரித்திரத்தைத் தெரிந்து சொல்வதற்கு வடநாட்டு கல்வி வரலாற்றை தெரிந்து சொல்வது அவசியம் ஏனெனில் வடவர்களின் சமஸ்கிருத அரபு மொழி வெறியினால் தான ஆங்கில மொழிக் கல்வி ஆதிக்கம் பெறும்படி ஆயிற்று.

1757-ல் நடைபெற்ற ப்ளாசி யுத்தம் ஆங்கிலேயர்களை வங்காளத்தின் அதிபர்களாக மாற்றி விட்டது. 1765-ல் அவர்களுக்கு டில்லி சக்ரவர்த்தியால் கொடுக்கப்பட்ட திவானி உரிமை வங்கத்தை ஆளும் உரிமையாகி விட்டது. இப்படி அதிகார மடைந்து ஆட்சி நடத்திவந்த ஆங்கிலேயர்கள் நாட்டுக் கல்வி ஸ்தாபனங்களைப்பற்றி யாதொரு சிரத்தையும் எடுத்துக் கொள்ளவில்லை. எப்போதும் போலவே நடந்து வரும்படிவிட்டு விட்டனர். ஆனால் வாரன்ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டதிலிருந்து கல்வித் துறையானது பெரும் மாற்ற மடையத் துவங்கியது. வாரன்ஹேஸ்டிங்ஸ் வங்க மொழியிலும், பர்சிய மொழியிலும் வல்லவர். உருது மொழியும் நன்கு கற்றறிந்திருந்தார். சமஸ்கிருத அரபு மொழிகள், இலக்கியங்கள், ஸ்தாபனங்கள் ஆகியவைகளை ஆதரிப்பதிலும் புதுப்பிப்பதிலும் ஆர்வம் கொண்டவரா யிருந்தார். இவரால்தான் இந்துமதச் சட்டமென்றும், முஸ்லீம் மதச் சட்டமென்றும் ஏற்படுத்தப்பட்டு நீதி மன்றங்களில் அமுல் செய்யப்பட்டது. இவர் 1781-ல் முஸ்லீம்களின் வேண்டுகோள்படி கல்கத்தாவில் முஸ்லீம்களுக்கென மத்ரசா என்ற ஒரு முஸ்லீம் கல்லூரியை நிறுவினார். தங்களுக்கென்று ஒரு கல்லூரியை ஏற்படுத்தும்படி வங்க முஸ்லீம்கள் கவர்னர்ஜெனரலை வற்புறுத்தக் காரணமென்ன! இதற்கு ஏ. ஹாவல் என்பார் தமது 'இந்திய கல்வி வரலாறு' என்ற ஆங்கில நூலின்கண் விடை தந்துள்ளார்.

'அந்தக் காலத்திலேயே பெரும் சம்பளமுள்ள அரசாங்க உத்தியோகங்கள் யாவும் இந்துக்களின் ஏக போக உரிமைகளாக இருந்து வந்தன. தங்களுக்கும் இந்த உரிமையில் பங்கு உண்டு என்பதை வங்க முஸ்லீம்கள் வாரன்ஹேஸ்டிங்ஸ் அவர்களிடம் எடுத்துக் காட்டினர். இத்தகைய உத்தியோகங்களை அடைவதற்கு தங்களை தயார் செய்து கொள்வதற்கு ஒரு தனிக் கல்லூரி அவசியம் என வற்புறுத்தினர்.'

இவர்களது இம்முறையீட்டில் இந்த உண்மையை புரிந்து கொண்ட வாரன் ஹேஸ்டிங்ஸ் தாமே முயன்று மேற்கூறிய மத்ரசாவை நிறுவினார். முஸ்லீம் மாணவர்கள் அரசாங்க உத்தியோகங்கள் அடைவதற்கான எல்லாவிதமான பயிற்சிகளும் கொடுக்கப்பட்டு வரும்படி ஏற்பாடு செய்தார். அரபு மொழியில் பாடப் பயிற்சிக் கொடுக்கப்பட்டு வந்தது. இந்தக் கல்லூரியை முதல் இரண்டாண்டுகள் தமது கைப் பணத்தை செலவிட்டே நடத்தி வந்தார் வாரன்ஹேஸ்டிங்ஸ், பின்னர் சர்க்கார் அதிகாரத்திற்கு மாற்றினார். இக்கல்லூரியில் காஷ்மீர், குஜராத், கர்நாடகம் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் மாணவர்கள்வந்து கல்வி பயின்று வந்தனர்.

சர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர். இவர் சமஸ்கிருத மொழியில் பற்றுதல் உடையவர், அதன் இலக்கியங்களை மிகப் பெரிதும் போற்றுகின்றவர். நாட்டு சரித்திரம், மக்கள் வரலாறு மொழி அமைப்பு. மொழி வரலாறு, இலக்கியம் முதலியவற்றைப் பற்றி ஆராய்ந்து தெரிந்து கொள்வதற்கான சங்கம் ஒன்றை கல்கத்தாவில் 1784-ல் நிறுவினார், இந்தச் சங்கம் 'வங்க ராயல் ஆசிய சங்கம்' என்ற பெயருடன் துவக்கப்பட்டது. கோல்புருக், வில்சின்ஸ், கில்கிரிஸ்ட் போன்ற ஆங்கில அதிகாரிகள் இந்திய நாகரீகம், இலக்கிய வளம் முதலியவற்றை ஆராய்ந்து பார்ப்பதில் அக்கரை கொண்டவர்கள், ஆகவே இப்படிப்பட்ட ஒரு சங்கம் நிறுவுவதை அவர்கள் வரவேற்றனர், சங்கம் நிறுவுவதில் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டனர். இந்த சங்கமும் சங்க அங்கத்தினர்களும் செய்ததென்ன?

பழைய சமஸ்கிருதபுளுகுபுராணங்களை தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தடித்தார்கள், சமஸ்கிருத மொழியையும் இலக்கியத்தையும் வானளாவப் புகழ்ந்தார்கள். சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்கும் சமஸ்கிருத கல்வி வளர்ச்சிக்கும் ஆதரவளித்து வந்தார்கள், இவர்களது இப்படிப்பட்ட செய்கை வங்க முஸ்லீம்களை மனம் புழுங்கச் செய்தது, ஏன் இந்துக்களில் கூட முற்போக்கு எண்ணங் கொண்டவர்களை திகைக்கச் செய்தது, ஆங்கில அதிகாரிகளில் பலரும் இவர்களது கீழ்த்திசை மொழி இலக்கிய வெறியைக் கண்டித்தனர்.

ஜோனதான் டங்கான் என்பார் காசியில் பிரிட்டிஷ் ரெசிடெண்டாக இருந்து வந்தவர், இவருக்கும் அந்த சமஸ்கிருத பைத்தியம் உண்டு, 1791-ல் காசியில் சமஸ்கிருத கல்லூரி ஒன்றை நிறுவினார். இது 'காசி சமஸ்கிருதக் கல்லூரி' என்னும் பெயருடன் துவங்கியது, இந்த சமஸ்கிருதக் கல்லூரி துவக்கப்பட்டது ஏன்? இந்துக்களின் மதம், சட்டம், இலக்கியம், மொழி ஆகியவைகளை ஆதரிக்கவும் வளர்க்கவும் இது நிறுவப்பட்டது. இதற்காக மட்டுமல்ல; வேறொரு காரணமும் உண்டு, 'கல்கத்தா மத்ராசா' என்ன காரணத்திற்காக நிறுவப்பட்டதோ அதே காரணத்தின் அடிப்படையில் ஐரோப்பிய நீதிபதிகளுக்கு இந்து உதவி அதிகாரிகளை தயார் செய்வதற்காக இந்த சமஸ்கிருத கல்லூரி நிறுவப்பட்டது.' திரு எஸ் என். முகர்ஜி தமது 'இந்திய கல்வி சரித்திரம்' என்ற நூலின்கண் கூறுகின்றார். மனு தர்ம சாஸ்திரம் கூறுகின்றபடி சட்டம் தத்துவம், நீதிபரிபாலனம் முதற்கொண்டு எல்லா பாடங்களும் புகட்டப்பட்டு வந்தன.

1800-ல் கவர்னர் ஜெனரல் லார்ட் வெல்லஸ்லி அவர்களால் கல்கத்தாவில் 'போர்ட் வில்லியம் கல்லூரி' என்ற பெயரில் ஒரு கல்லூரி துவக்கப்பட்டது. இக்கல்லூரியானது சர்க்கார் அதிகாரிகளின் ஒழுக்கக் குறைவினால் ஏற்பட்ட சந்ததியினரை நல்ல குடிமக்களாகச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது இக்கல்லூரியில் முஸ்லிம் இந்து சட்டதிட்டங்கள் மொழிகள் இலக்கியங்கள் சரித்திரங்கள் யாவும்புகட்டப்பட்டு வந்தன,

இப்படியாக முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்குமாகத் தனித்தனி கல்லூரிகளும் பள்ளிகளும் ஏற்பட்டு வரும் போதே தனி ஆங்கில மொழிப் பள்ளிகளும் ஏற்பட்டுக் கொண்டே வந்தன. வட இந்தியர்களில் ஒரு பகுதியினர் ஆங்கில மோகங் கொண்டு ஆங்கில மொழியையும் இலக்கியத்தையும் விஞ்ஞானத்தையும் போற்றத் துவங்குவாராயினர். எப்படி ஆங்கிலேயர்களில் ஒரு பகுதியினர் சமஸ்கிருத மொழி இலக்கியங்களைக் காதலித்தனரோ அதே போன்றே இந்தியர்களில் ஒரு பகுதியினர் ஆங்கில மொழி இலக்கியங்களைக் காதலிப்பாராயினர், அவர்களது ஆங்கில மொழிக் காதல் கல்கத்தாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஆங்கில மொழிப் பள்ளிகளை ஈன்றெடுத்தது. புதிய ஆங்கில அரசாங்கத்தில் உத்தியோகம் வகிக்க வேண்டும் என்ற ஆசை உயர்சாதிக்காரர்களையும், பணம்படைத்தவர்களையும் ஆட்டுவித்தது. அதன்பயனாக ஆங்கிலமொழியைக் கற்றுக்கொண்டும் தம்மை ஆங்கிலேயர்களாக மாற்றிக் கொண்டும் ஆரவாரம் செய்தனர். இந்துக்களின் இந்த ஆங்கில மோகத்தைக் கண்ட ப்ரௌன் என்ற ஆங்கிலேயர் 1788-ல் இந்துமாணவர்கட்காக ஒரு போர்டிங் பள்ளி நடத்தி பணம் திரட்டத் துவங்கினார். இவரைப்பின்பற்றினர் பலர். இவ்வாறாக ஆண்களுக்கும் பெண்களுக்குமாக பல ஆங்கிலப் பள்ளிகள் ஏற்பட்டு ஆங்கில மயமாகக் காட்சியளித்தது வங்காளம்! (தொடரும்)

— திராவிடப்பித்தன்

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு

சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கும்

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி

ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்

தயாரிப்பவர் :

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு

தஞ்சாவூர்



★ ★

அப்பமும் - பாட்டும்!

இனியதிரு விடத்தின்கண் இன்பம் இன்றி
இன்னலுறும் என்னருமைத் தமிழகத்தீர்!
"தனியொருவன் உணவின்றித் தவிப்பானுகில்
தவிடுபொடி யாக்கிடுவோம் உலகை"யென்று
முனிவுடனே பாரதியார் புரட்சிப் பண்ணை
முழக்கினுன் அன்றேநம் தமிழகத்தில்
"தனித் தமிழன்" அரசாளும் இந்நாள்வந்தும்
தவிக்கின்ருர் பஞ்சத்தால் தமிழர்; ஏனே?

இல்லாமை என்னும்நோய் தமிழகத்தில்
இன்றளவும் சிரஞ்சீவித் தன்மைபெற்று
நல்லாரின் உள்ளத்தைப் புண்படுத்தி
நாதியற்ருேர் பட்டியலில் இடம் வழங்கிப்
பொல்லாத மனிதர்களாய் உலவவிட்டுப்
பேயாட்டம் போடுவது கண்டும் இன்று
கல்லாரும் கற்றவரும் மற்றையோரும்
காணுராய் வாய்மூடி இருப்பதேனே?

கம்பர்தரும் காட்சியிலே மயங்கிப் பின்னர்க்
காமரசக் குட்டையிலே மூழ்கிவிட்டு,
"எங்களுக்குக் கம்பன்தான் பாட்டன்; தெய்வ
அங்கமுடைப் பாரதியார் எங்களப்பன்"
தங்களுக்குத் தானவர்கள் சொந்தமென்று
தமிழரசார் இவ்வாருய்க் குதிக்கின்ருர்கள்.
செங்கொடியோர்—காங்கிரசார் மற்றுமுள்ள
சங்கத்தார் திருவிடத்தில் இருப்பதேனே?
"தலைநிமிர்ந்து வாழ்ந்திடுவீர்! இனியேனும் நீர்
தன்மானம் பெற்றிடுவீர்! தமிழகத்தின்
விலைமதிக்க வொண்ணுத செல்வமெல்லாம்
வெளிநாட்டார் சுரண்டாமற் பாதுகாத்துத்
தலையேனும் தந்துபொது உடைமையாக்கித்
தமிழின்ப மணம்வீசச் சமத்துவமாய்க்
கலைபோற்றி வாழ்க"வென எச்சரிக்கும்
கடமையுளத் திராவிடனை மறப்பதேனே?

—பூவையான்







"செல்லப் பிள்ளை"

ஏவி. எம். வெளியீடு

திரைக்கதை—வசனம் : ஜாவர் சீதாராமன்

கதை:— தாய் தந்தையற்ற மணி, தன் அண்ணன் வீட்டில் வளர்கிறான் அண்ணி கல்யாணி, அவனை செல்லமாக தன் குழந்தையைப்போல் வளர்க்கிறாள், கல்யாணி மணியின் சிறு குற்றங்களை மூடிமூடி வைத்து. சமயத்தில் கண்டிக்காததினால் காளையடைவில் மணி ஒரு தறுதலையாகி சூதாடவும் ஊர் சுற்றவும் ஆரம்பிக்கிறான்

எப்படியாவது சினிமா ஸ்டார் ஆக வேண்டு மென்று கனவு கொண்டிருக்கும் லலிதாவைச் சந்திக்கிறான். லலிதாவின் கனவை. நனவாக்குவதாகச் சொல்லி, மணி அவள் காதலனாகிறான். இதற்கு லலிதாவின் தம்பி அவதாரமும் முயற்சி செய்கிறான்.

மணிக்கு கல்யாணம் செய்தால், அவன் திருந்திவிடுவானென்று, அஞ்சலை என்ற உறவுப்பெண்ணை மணிக்கு மணம் முடிக்கின்றனர், அண்ணனும் அண்ணியும்.

லலிதாவின் சினிமா மோகத்தை திருப்திசெய்ய மணி லலிதாவின் சகோதரன் அவதாரத்தோடு கோயம்பத்தூர் கிளம்ப திட்டமிடுகிறான். பணத் தேவைக்காக அண்ணன் வேலை செய்த கடையிலேயே திருடுகிறான். அண்ணியின் வீட்டையும் வட்டிக்கடையில் ஈடு வைக்கிறான், தம்பி செய்த திருட்டுக்காக, அண்ணன் வேலை யிழக்கிறார்.

லலிதாவை சினிமாவில் சேர்க்கும் முயற்சிகள் பலிப்பதற்கு முன், மணி கொண்டு வந்த பணம் தீர்ந்து விடுகிறது. கடன் வாங்கவோ வசதி யில்லை. இந்த நிலையில், தனது சிறு வயது நண்பன் நளனோடு சேர்ந்து கள்ள நோட்டு விநியோகத்தில் ஈடுபடுகிறான்.

வேலை யிழந்து நிற்கும் பரமசிவம் வட்டிக்கடைக்காரன் தொந்தரவு தாங்காமல், கோயம்பத்தூரில் மணி பணவசதியோடு வாழ்வதைக் கேள்விப்பட்டு அவனைப் பணம் கேட்க வருகிறார். மணி அண்ணனுக்கு பணம் கொடுத்து உதவுகிறான். பரமசிவம் வட்டி கடைகாரனுக்கு கொடுத்த நோட்டுகள் கள்ள நோட்டுகள் என்று போலீசார் பரமசிவத்தை கைது செய்கின்றனர். இந்த நிலையிலும் பரமசிவம் மணியை காட்டிக்கொடுக்காது போலீசுடன் செல்லுகிறார், கல்யாணி மணம் உடைந்து பிரமை பிடித்தவள் ஆகிறாள்.

இதுசமயம் மணிக்கு தனது நண்பனிடமிருந்து அவசர செய்தி வரவே வெளியூர் செல்கிறான். சினிமா ஸ்டார் ஆக வேண்டுமென்ற லலிதாவுக்கு டைரக்டர் யமனின் தொடர்பு ஏற்படுகிறது. படமுதலாளியிடம் கூறி சினிமாவில் நடிக்க ஆவன செய்வதாக உறுதியளித்து லலிதாவின் இல்லத்தில் கேளிக்கை விளையாட்டில் ஈடுபடுகிறார்கள் டைரக்டர் யமனும் படத் தயாரிப்பாளரும் அவரது கோஷ்டியும்.

தனது கணவனை எப்படியாகிலும் திருத்தியே தீருவதென்ற உறுதி கொண்டு அஞ்சலை கோவை வருகிறாள், அவதாரத்தின் சிபார்சால் லலிதா வீட்டிலேயே மாறுவேடத்துடன் பட்லராகப் பணியாற்றுகிறாள். லலிதாவின் நடவடிக்கைகளையும் தனது கணவன் வெளியூர் சென்றுள்ள விவரங்களையும் அறிகிறாள்.

வெளியூர் சென்றிருந்த மணி கடுமையான காய்ச்சலுடன் லலிதாவின் வீட்டுக்கு வருகிறான். நோயின் காரணமாக மணி மருத்துவ விடுதியில் சேர்க்கப்படுகிறான். இது டைரக்டர் யமனுக்கு மிகவும் அனுகூலமாக விருந்தது. மருத்துவ விடுதியில் அஞ்சலை வேலைக்காரன் வேடத்தில் மணிக்குத் துணையாக இருந்து வருகிறாள். லலிதாவின் மீது நீங்காத அன்பு கொண்ட மணி தனது உடல் சற்றுக் குணமானதும் மருத்துவ விடுதியிலிருந்து அதிகாரிகளின் உத்திரவில்லாமல் வெளியேறி லலிதாவின் இல்லத்தை வந்தடைகிறான். அதுசமயம் டைரக்டர் யமனுடன் லலிதா நாட்டியமாடுகிறாள். இதைக் கண்ட மணிக்கு ஆத்திரம் மேலிட அவனைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்த எண்ணுகிறான். இடையே மணிக்கும் டைரக்டர் யமனுக்கும் கைகலப்பு ஏற்படுகிறது. சமயத்தில் அஞ்சலை வந்து உதவுகிறாள்.

கள்ளநோட்டு உற்பத்தி குற்றத்திற்காக மணி தானே போலீசாரிடம் சரணடைந்து அண்ணனை விடுவிக்கிறான். கள்ள நோட்டு வழக்குத் தீர்ப்பில் மணி—லலிதா, ஆகியோருக்கும் சிறைத் தண்டனை அளிக்கப்படுகிறது. சிறைத் தண்டனை முடிந்து விடுதலை பெற்றதும் மணி—அஞ்சலை தனது அண்ணன் அண்ணியுடன் இனிது வாழ்கிறான்.

கதையைப் பொறுத்தவரை மிகவும் பாராட்டத்தக்க கருத்தோ படிப்பினையோ ஒன்றுமில்லை, பழைய சரக்கு புதிய மொந்தையாகத்தான் கதையின் அமைப்பு இருக்கிறது. தமிழ்ப்பட கதாசிரியர்களில் பெரும்பாலோருக்கு சமுதாயத்தில் மலிந்துள்ள கேடுகளை எடுத்துக்காட்டித் திருத்தும் சிந்தனை சக்தி உண்டாவது குதிரைக்கொம்பு போலும்!

நடிப்பு

நடிப்புப் புலவர் **கே. ஆர். ராமசாமி** மணியாகத் தோன்றுகிறார். நடிப்பு மிகவும் பாராட்டத்தக்க தென்பதில் ஐயமில்லை. ஆயினும் போதிய சந்தர்ப்பம் இவருக்கு கொடுக்கப்படவில்லையென்று ரசிகர்கள் குறைகூறும் அளவுக்கு மற்ற நடிகர்களின் கோணங்கித்தனம் குறுக்கிடுறது. சிற்பியின் கைப்படாத சிற்பமே என்ற கீதம்பாடி லலிதாவாகத் தோன்றும் தோழியர் சாவித்திரியுடன் கொஞ்சிக் குலவும் கட்டமும் அதுபோலவே டைரக்டர் யமனுடன் லலிதா நடனமாடும் கட்டத்திலும் கே. ஆர். ராமசாமி அவர்கள், நடிப்பின் உச்ச நிலையை எட்டிப்பிடிப்பதுமட்டுமல்ல நடிப்புப்புலவர் என்ற சிறப்புப் பெயருக்கு மேலும் தனிப் பெருமையை திரட்டிக் கொள்கிறார்.

லலிதாவாகத் தோன்றும் தோழியர் **சாவித்திரி** தாம் ஏற்றுள்ள பாத்திரத்திற்கேற்ற வகையில் கச்சிதமாகவே நடித்திருக்கிறார். படமுதலாளி பசவப்பாவை மகிழ்விக்கும் கட்டத்திலும் டைரக்டர் யமனுடன் நடனமாடும் போது மணியைக் கண்டதும் நடுங்கிக் கொண்டே நடனமாடும் கட்டத்திலும் தோழியர் சாவித்திரி உண்மையிலேயே ஓர் நடிக மேதையாக விளங்குகிறார். மற்ற நடிகர்களின் கோணங்கித்தனம் இவ்வம்மையார் தோன்றும் கட்டங்களிலும் குறுக்கிடாமலிருந்தால் மேலும் சிறப்புற்றிருக்கும்.

அவதாரமாக நடிக்கும் தோழர் **கே. எ. தங்கவேலு** இப்படத்தின் முழுவெற்றிக்கு பெரும் முட்டுக்கட்டையாக விளங்குகிறார்.. அர்த்தமற்ற--அளவுக்கு மீறியசேஷ்டைகள் தாம் ஏற்று நடிக்கும் பாகத்தின் தரத்தையும் மற்ற நடிகர்களின் சிறப்பையும் ஏன் படத்தின் பெருமையையுமே சீர்குலையச் செய்கிறது என்பதை இனியாகிலும் உணர்ந்து நடிக்குமாறு தோழர் தங்கவேலு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்..

தோழர் **டி. எஸ். பாலையா** டைரக்டர் யமனாகத் தோன்றி கூடுமான அளவு கச்சிதமாகவே நடித்திருக்கிறார். ஆனால் இவர் வரவர காமெடியனாக மாறுகிறாரா என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு அதுவும் காரணமின்றியே முகத்தைச் சுளித்துக் கொள்வது விகாரமாயிருக்கிறது.

கல்யாணியாகத் தோழியர் **கண்ணம்பா**வும், அஞ்சலையாக தோழியர் **பண்டரிபாயும்** பரமசிவம் பிள்ளையாக தோழர் **பந்துலுவும்** நளனாக தோழர் **முஸ்தபாவும்** தோன்றி சுமாராக நடித்திருக்கின்றனர்.

படமுதலாளி பசவப்பாவாகத் தோன்றும் **ஜாவர் சீதாராமன்** அவதாரமாகத் தோன்றிய கே. எ. தங்கவேலுவுடன் போட்டிப் போட்டுக் கொண்டு படத்தின் தரத்தை குறைக்கும் வேலையில் தனது கைவரிசையை காட்டி யிருக்கிறார்!

பாடல்கள் : சிற்பியின் கைபடாத சிற்பமே—மதனா எழில் ராஜா நீ வாராயோ என்ற இரு பாடல்கள்தான் ரசிக்கத்தக்கவையா யிருக்கின்றன.

முக்கிய குறைபாடுகள் : பட முதலாளி பசவப்பா தோன்றும் கண்றாவிக் காட்சியை எடுத்துவிட்டு மணி—லலிதா ஆகியோர் சேர்ந்து தோன்றும் கட்டத்தை விரிவு படுத்தி கே. ஆர். ராமசாமி அவர்கள் மேலும் சில பாடல்களைப் பாடவும் நடிக்கவும் சந்தர்ப்பம் கொடுத்திருந்தால் படத்தின் இடையிடையே ரசிகர்களுக்கு தோன்றும் சலிப்புக்கு இடமில்லாமலிருக்கலாம். அது போலவே அவதாரத்தின் சேஷ்டைகளை வெட்டி எடுத்து அந்த நேரத்தை மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கலாம்.

படவுலகில் அனுபவம் வாய்ந்த **ஏவி. எம். கம்பெனியாரும், டைரக்டர் எம். வி. ராமன்** அவர்களும், இந்த முக்கிய குறைபாட்டினை கவனிக்காதது விந்தையாகவே யிருக்கிறது,

எனினும், நடிப்புப் புலவர் கே. ஆர்: ராமசாமி தோழியர் சாவித்திரி ஆகியோரின் நடிப்புத் திறமையினால் இப்படம் ஓரளவு வெற்றிவாகை சூடி பவனி வருவதுடன் ரசிகர்களும் படத்தை கண்டு களிக்க வேண்டியது அவசியமாகிறது, **—வீரன்**

'குலேபகாவலி'

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன், டி. ஆர். ராஜகுமாரி, ஜி. வரலட்சுமி, சந்திரபாபு, தங்கவேலு ஆகியோர் நடிக்கும் ஆர். ஆர். பிக்சர்ஸின் 'குலேபகாவலி' பிரகாஷ் ஸ்டுடியோவில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள அரங்கத்தில் கத்திச் சண்டைக் காட்சி ஒன்று எடுக்கப்பட்டதும் திரையிடத் தயாராகிவிடும் என்று தெரிகிறது. எம். ஜி. ஆர். புலியுடன் சண்டையிடும் காட்சி பிரமிக்கத் தக்கதாய் இருக்கிறதாம்!

'உடல் பருக்கும் கதை சொல்லுவேன் கேள் அண்ணே அண்ணே'

பாளையங்கோட்டை சினிமா ரசிகர்கள் சங்க சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்ட மொன்றில் சொற்பொழிவாற்றிய அவ்வை டி. கே. சண்முகம் நடிகர்களின் உடல் பருப்பதேன் என்பதை விவரித்துப் பேசுகையில் மக்கள் பாராட்டைப் பார்த்தாலே கலைஞர்களின் உடல் பருத்து விடுகிறது. இலங்கை போய் திரும்பிய பிரண்ட் ராமசாமி 17-பவுண்டும் நடிகர் கருப்பையா 45 பவுண்டு எடையும் கூடியிருப்பதாக தெரிவித்தாராம்,

இந்த "ஆராய்ச்சி" ஆங்கில—இந்தி நடிகர்களுக்கு அப்பாற்பட்டது போலும்!